பக்கங்கள் : பன்னிரண்டு

மாநகர சபை, யாழ்ப்பாணம்

# உதயன்

Registered as a Ne[...]er

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 07 சனிக்கிழமை (21.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 206

# உயர்மட்ட இந்தியக் குழுவினர் கொழும்புக்கு திடீர் விஜயம்!

## வெளியுறவு, பாதுகாப்பு செயலர்களுடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் வருகை



நாராயணன் சிவசங்கர் மேனன் விஜய் சிங்

கொழும்பு, ஜூன் 21

இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கைப் போக்கைத் தீர்மானிக்கும் புதுடில்லியின் உயர்மட்டப் பிரமுகர்கள் என்று கருதப்படுகின்ற மூன்று முக்கிய பிரபலஸ்தர்கள் நேற்றுத் திடீரென-திடுதிப்பென-ஒன்றாகக் கொழும்புக்கு விஜயம் செய்தனர்.

இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், வெளிவிவகாரச் செயலாளர் சிவசங்கர் மேனன், பாதுகாப்புச் செயலாளர் விஜய் சிங் ஆகிய மூன்று இந்திய உயரதிகாரிகளே முற்கூட்டியே வெளிப்படுத்தப்படாத ஒரு விஜயமாக நேற்றுத் திடுதிப்பென கொழும்புக்கு வந்திருக்கின்றார்கள்.

நேற்று நண்பகல் 11.30 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய அவர்கள் அங்கிருந்து விசேட ஹெலிக்கொப்டரில் கொழும்பு நகரத்தை வந்தடைந்தனர்.

இரண்டுநாள் விஜயமாகக் கொழும்பு வந்த அவர்கள் இங்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் மற்றும் அவரின் அரசின் மூத்த தலைவர்களையும் சில குறிப்பிட்ட எதிர்க்கட்சிப் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசுவர் என எதிர்பார்க்கப் படுகின்றது. நேற்றிரவு கிடைத்த பிந்திய தகவலின் பிரகாரம் இந்திய உயர்மட்டக் குழுவினர் ஜனாதிபதியை இன்று சந்திக்கின்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மயானத்தில் 2 சடலங்கள் மீட்பு!

கொழும்பு, ஜூன் 21

மன்னார் - தலைமன்னார் வீதியில் உள்ள பொது மயானத்தில் இருந்து இரு இளைஞர்களின் சடலங்களைப் பொலிஸார் நேற்றுக்காலை மீட்டுள்ளனர்.

இச்சடலங்களில் சூட்டுக்காயங்கள் காணப்படுகின்றன என்றும், நேற்று மாலை வரை சடலங்கள் அடையாளம் காணப் பட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் தேடுதலும் கைதும்

மன்னார், ஜூன் 21

மன்னார், மன்னார் பஸ்நிலையம், பள்ளிமுனை, மூர் வீதி ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை இராணுவத்தினரும் மற்றும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது பாடசாலை மாணவர் மூவர் உட்பட 13 பேர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு தெரிவானோர் பெயர் விவரங்கள் 2 ஆம் பக்கத்தில்

## நீர்கொழும்பில் தமிழ் வர்த்தகர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூன் 21

நீர்கொழும்பு காமாச்சியோடை பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த தமிழ் வர்த்தகர் மீது நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதே இடத்தைச் சேர்ந்த நகைக்கடை உரிமையாளரான கனகரட்ணம் தேவநாயகம் என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப் பட்டவராவார்.

## கிழக்கு மாகாணசபைக்குக் காணி அதிகாரம் விசேடமாக வழங்கும் திட்டம் ஏதும் இல்லை

### அரசுத் தரப்பில் திட்டவட்டமாக அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று கிழக்கு மாகாணத்திற்கு காணி அதிகாரங்கள் எவையும் வழங்கப்படமாட்டா என்று அரசாங்கம் நேற்று நாடாளுமன்றில் அறிவித்தது.

நாட்டின் ஏனைய மாகாணங்களில் உள்ளது போலவேதான் கிழக்கு மாகாணத்திலும் காணி அதிகாரம் நடைமுறையில் இருக் கும் என்று அரசு மேலும் கூறியது.

வடக்கில் பிரபாகரனுக்கும் கிழக்கில் பிள்ளையானுக்கும் காணிகளை வழங்க அரசு தீர்மானித்திருக்கிறது என்று ஐ.தே. கட்சியின் எம்.பியான ரவி கருணாநாயக்க நேற்று சபையில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோது அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்திற்கென்று விசேட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன், பிள்ளையானை நான் கண்டதில்லை; அரசாங்கத்துக்குத்தான் அவர்களுடன் நல்லுறவு

### நாடாளுமன்றில் நேற்று ரணில்



கொழும்பு, ஜூன் 21

"பிரபாகரனையோ, தமிழ்ச்செல்வனையோ, பிள்ளையானையோ நான் நேரில் கண்ட தில்லை; பேசியதும் இல்லை. இவர்கள் மூவரையும் நான் அறியேன்.

ஆனால் இப் போதைய அரசாங்கத்துக்கும் அதன் பிரமுகர்களுக்கும்தான் அவர்களுடன் நல்லுறவு உள்ளது.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திற்கு காணி அதிகாரம் வழங்குவது சம்பந்தமான வாக்குவாதத்தின் போதே ரணில் இவ்வாறு கூறினார்.



நாடாளுமன்றத்தில் நேற்று கேள்வி நேரத்தின் போது காணி அதிகாரம் தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையின் போது வடக் கின் காணி அதிகாரத்தை ரணில் பிரபாகரனுக்கு வழங்கிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. அதிருப்திக் குழுவின் வழக்குத் திடீர் வாபஸ்!

கொழும்பு, ஜூன் 21

ஐக்கிய தேசியக் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்தும் நிறைவேற்றுக் குழுவிலிருந்தும் தாங்கள் வெளியேற்றப்படுவதற்கு எதிராகத் தடைவிதிக்கும்படி கோரி அக்கட்சியின் அதிருப்திக் குழுவினரான அமைச்சர்கள் கரு ஜெயசூரிய, ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட உட்படப் பதினொருபேர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுக்கள் நேற்றுத் திடீரென வாபஸ் பெறப் பட்டன.

நேற்றுக் கொழும்பு மாவட்ட நீதிமன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் பெரியமடுவில் வியாழன்று கடுஞ்சமர்

கிளிநொச்சி, ஜூன் 21

மன்னார், சிராட்டிக்குளம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கடுஞ்சமரில் இராணுவத்தினர் 10 பேர் உயிரிழக்க மேலும் 36 பேர் வரை படுகாயமடைந்தனர் என்றும் புலிகள் தரப்பில் கூறப்படுகிறது.

பெரியமடுப் பகுதியில் இருந்து சிராட்டிக்குளப் பகுதியை நோக்கி நேற்று மாலை 4.30 மணியளவில் பிற்களச் சூட்டாதர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரு மாகாணசபைகள் கலைப்புக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 21

சப்பிரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகள் கலைக்கப்பட்டமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆறு அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் உயர் நீதிமன்றம், நேற்றுத் தள்ளுபடி செய்தது.

இச்சபைகள் அரசமைப்புச் சட்டத்துக்கு அமைவாகவே கலைக்கப்பட்டிருந்தன என்று தெரிவித்தே மேற்படி ஆறு மனுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு மேலும் 50 பேருக்கு அனுமதி

## திங்களன்று சமுகமளிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 21

தாதியர் ஆள்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை மூலம் மேலும் 50 மாணவர்கள் அனுமதிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்டவர்களை உரிய ஆவணங்களுடன் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

தெரிவானோர் விவரம் வருமாறு:-

என்.சிவகுமாரன்(குடாரப்பு), ரி.கோகுலவதனன்(சாவகச்சேரி), எஸ்.முகுந்தன்(கோப்பாய்), ரி.கமலரூபன்(அல்வாய்), எஸ்.சற்சொரூபன்(புத்தூர்), எஸ்.ஜெபநேசன்(சங்கானை), எஸ்.பிரதீபன்(கொக்குவில்), கே.கஜவர்ணன்(மல்லாகம்), பி.கஜேந்திரன்(கொக்குவில்), கே.குணராஜ்(ஏழாலை), ஜி.கிறிஸ்ரிராசா (தும்பளை), எஸ்.சிவநிரூசன்(நாவற்குழி),வி.பகிர்தன்(கொக்குவில்), எஸ்.சுபர்ணன்(மானிப்பாய்), எஸ்.கஜானந்தன்(வட்டுக்கோட்டை), கே.கணேசவேல்(துன்னாலை), பி.சத்தியராகவன் (யாழ்ப்பாணம்), ஜி.பரிபூரணன்(உடுப்பிட்டி), பி.பார்த்தீபன்(ஏழாலை), பி.அனுஜன்(மல்லாகம்), எ.சசிதரன்(பொலிகண்டி), கே.ஜனார்த்தனன் (இணுவில்), யூ.கௌரிசங்கர் (திருநெல்வேலி), கே.கிருபாகரன் (காரைநகர்), ஏ.நிசாந்தன்(நல்லூர்), எஸ்.பிரதீபன்(பருத்தித்துறை), எஸ்.தமிழ்மாறன் (உரும்பிராய்), ஆர்.சயந்தன் (யாழ்ப்பாணம்),செல்வி ஆர்.பாலச்சந்திரன்(அம்பன்), செல்வி என்.ராஜரத்தினம்(சண்டிலிப்பாய்), செல்வி ஜி.சின்னையா (சரசாலை), இ.தேவகுமார் (சரசாலை), ஏ.ஜே.கபிலாஸ்ராஜன் (மாதகல்), ஜே.மெனஸ் (மீசாலை), ரி.சுஜீவ்ராஜ்(கொட்டடி,யாழ்.), வி.சிறிகாந் (அம்பன்), கே.சிவநேசன் (மந்துவில்), எஸ்.சுதர்சன் (சண்டிலிப்பாய்), எஸ்.சதாரூபன் (நவாலி), எ.கஜன் (கொழும்பு), எம்.மயூரன் (நாவற்குழி), கே.சிறிதவயோகராஜன் (ஊர்காவற்றுறை), ஆர்.துளசிதரன்(தொல்புரம்), எம்.சஜிதாஸ்(மட்டுவில்), எஸ்.விஜயதீபன்(நல்லூர்), எம்.ஜோதீஸ்வரன்(குப்பிளான்), வி.கிருஸ்ணகுமரன் (பண்ணாகம்), பி.பிரசன்னா (பொலிகண்டி), பி.மதியூகன்(ஏழாலை). (அ-1)

## நவீல்ட் பாடசாலைக்கு இந்தத் தவணையில் அனுமதி வழங்குவதில்லை

யாழ்ப்பாணம் ஜூன் 21

கைதடி நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலைக்கு மாணவர்களை அனுமதிக்கும் காலம் வருட ஆரம்பமே ஆகும். அனுமதி காலத்துக்கு புறம்பான பருவங்களில் எவரும் அங்கு சேர்க்கப்படுவதில்லை.

இவ்வாறு மேற்படி பாடசாலையின் அதிபர் திருமதி ஏ.கருணாரத்னா 'உதயனுக்'குத் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை 18.06.2008 உதயன் 9ஆம் பக்கத்தில் வெளியான நவீல்ட் பாடசாலைக்கு அனுமதி தொடர்பான செய்தி குறித்து பிரஸ்தாபிக்கையிலேயே அதிபர் இவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளார்.

வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனத் தலைவர், கைதடி நவீல்ட் பாடசாலையில் அனுமதி பெறுவதற்கு அப்பிரதேசத்தில் உள்ள செவிப்புலனற்றோரின் பெற்றோரை தம்மிடம் பதிவு செய்யுமாறு கேட்டிருந்தார். அதற்கும் மேற்படி பாடசாலை நிர்வாகத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் வருட மத்தியில் அனுமதி வழங்குவதில்லை என்றும் அதிபர் உதயனுக்கு மேலும் விவரித்தார். (அ)

## கொக்குவில் கொள்ளைச் சந்தேக நபர்களை யாழ். நீதிமன்றுக்கு மாற்ற உத்தரவு

யாழ்ப்பாணம் ஜூன் 21

பல்வேறு கொள்ளைச்சம்பவங்கள் தொடர்பாக சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்கள் தொடர்பான வழக்கு யாழ். நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது.

கொக்குவில் சம்பியன் லேனில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் பிரஸ்தாப நபர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் - அந்தப்பகுதி யாழ். நீதிமன்ற நியாயாதிக்கத்துக்கு உட்பட்டது என்றும்- தெரிவித்த மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன், வழக்கை யாழ். நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு உத்தரவிட்டார்.

முகங்களை மறைத்து மூடிய வாகனத்தில் குறிப்பிட்ட திகதியன்று யாழ். நீதிமன்றத்தில் சந்தேக நபர்களை முன்னிலைப்படுத்துமாறு நீதிவான் தமது உத்தரவில் தெரிவித்தார். (அ-1)

## திருத்தி வாசிக்கவும்

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (19.06.2008) உதயன் நான்காம் பக்கத்தில் பிரசுரமான சாவகச்சேரி ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் பதவிக்கான விளம்பரத்தில் வயது 25 தொடக்கம் என்பதற்குப் பதிலாக 23 தொடக்கம் என்றும்-

8 ஆவது சம்பளத்திட்டப் பதவி யொன்றில் என்பதற்குப் பதிலாக 3 ஆவது சம்பளத் திட்டப் பதவி யொன்றில் என்றும் - தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. அவற்றைத் திருத்தி வாசிக்கவும்.


# Dairy Development Lanka

## Vacancy

**Post: Financial Officer**

Land O'Lakes Dairy Development Lanka seeks application from suitably qualified persons to fill the above mentioned post on a contract basis.

**Duty Station** : Jaffna
**Salary** : Negotiable
**Contract** : 4 months (fixed term)

**Qualification:**

1. Candidate should be qualified in Accounting related degree approved by any University or AAT
2. Partly qualified candidates with over two years experience in the relevant field may also apply.
3. Computer literacy and thorough knowledge in MS Excel is essential.
4. Have an excellent command in English language and working knowledge in Sinhala language will be an added advantage.
5. Females are encouraged to apply for the above post

**Responsibilities**

1. In charge of all accounting functions
2. Responsible for overall financial resources, monthly budget development and provide management support to project financial management HQ
3. Ability to work independently

Short listed candidates will be invited for the interview.
Interested are invited to send their CVs by e-mail or Fax on or **before 25th of June 2008**
**E-mail: thayalinir@sltnet.lk**
**Fax-021 222 3790**


## கண்ணீர் அஞ்சலி



மறைந்த சிவத்தமிழ்ச்செல்வி

### தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின் மறைவு சைவத்துக்கும் தமிழுக்கும் ஏற்பட்டுள்ள பாரிய இழப்பாகும். இதையிட்டு எமது இந்துமத குருமார் ஒன்றியம் ஆழ்ந்த மனவேதனையும் இழப்பையும் பெற்றுள்ளது. அவருடைய ஆத்மா சாந்தியடைய எம்பிரானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் இலங்கை. (75607)


## தவறிவிட்டது

நவரட்ணம் தவச்செல்வன் என்பவருடைய தே. அ. அட்டை [631292844V] யாழ். நகரில் ஸ்ரான்லி வீதிச் சந்திக்கும் [illegible] கோவிலுக்கும் இடையில் கே.கே.எஸ். வீதியில் 20.06.2008 வெள்ளிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்:

கௌரி அழகு மாளிகை
([illegible])
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

இராசு ரவிக்குமார் என்பவரது தே.அ.அட்டை (722024206V) 18.06.2008 புதன்கிழமை கே.கே.எஸ். வீதி றொட்டியாலடிக்கும் யாழ்.நகரப் பகுதிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. மேற்படி அடையாள அட்டையைக் கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் தந்துதவவும்.

கோணப்புலம் நலன்புரி நிலையம்,
மல்லாகம்.

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் ஆலய தேர்த்திருவிழா நிகழ்ந்தன்று பெறுமதி மிக்க கழுத்துச் சங்கிலி அம்மாள் சந்நிதான சூழலில் தவறிவிட்டது. கண்டெடுத்த அன்பர் அதனை தயவு செய்து கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைத்து அம்பாளின் அருள் கிடைக்க வேண்டுகின்றேன். எனது தொ.பே.: 0776544513 அல்லது அனுஷ்யா 3360 என்ற தொலைபேசியூடாகவும் தொடர்பு கொள்ளவும்.

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

## விற்பனைக்கு

புதிய தேக்குமர சாப்பாட்டு மேசை ஆறு குசன் கதிரைகளுடன் Dressing Table, முநிரை அலுமாரி, உடுக்கு அலுமாரி, கட்டில்கள், மேசைகள் மற்றும் சமையல் அறைப் பொருள்களும் விற்பனைக்குண்டு

தொடர்பு: 69, மடம் வீதி, Convent Road, யாழ்ப்பாணம்.


## பூங்கனிச்சோலை அறிவித்தல்

இன்றும் நாளையும் (21,22 ஆம் திகதிகளில்) பூங்கனிச்சோலை மூடப்பட்டிருக்கும் என்பதனை அறியத்தருகின்றோம்.

பூங்கனிச்சோலை.

# மரண அறிவித்தல்கள்

## நல்லையா சந்திராதேவி



கற்குளம், கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா சந்திராதேவி நேற்று(20.06.2008)வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சிவபாக்கியத்தின் அன்பு மகளும் காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கணபதி-இராமாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மௌனதாஸ், கிருஸ்ணதாஸ், ரகுணதாஸ், இந்துசன், குகனதாஸ், குமாரதாஸ்,ஜெயமுனிதேவி, வசந்தலாதேவி, சகிலாதேவி, புஸ்பலதாதேவி, கிருபாதேவி, குமுததாஸ் (அப்பன்), குமுதாதேவி, சந்திரதாஸ் (ரொமி), ஜீவனதாஸ் (செல்லா), கேமலா ஆகியோரின் அன்புத் தாயாரும் சைலசிறி, ஜெயசீலி, அன்பரசி, பிறேம்குமார், சிவநேசன், அருள்நாயகம் (மாமா), சிறிறஞ்சன், பிரபாகரன், கேதாரநாதன், சரோஜினி, அருந்தவம், சிவறஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜான்சன், ஜென்சிகா, ஆர்த்திகா, காஞ்சி, சௌமியா, மிதுஷன், சுபதீசன், கௌரீசன், லசியா, லக்சன், யுகன், ஜெனிக்கா, சியாம், விதுஷன், கிருசிகன், பிரதீஸ், யேசுபாபு, ஜதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தேவபரம், காலஞ் சென்ற மகேந்திராதேவி, கனகராஜேஸ்வரன், இராஜகாந்தம் (நிதி), லலிதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நடராசா, தவத்துரை, இந்திரன், முத்துராசா, புஸ்பராணி, இரத்தினம், மார்க்கண்டு, மாணிக்கம், தெய்வானை, இராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2008) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாழையம்பதி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*6 ஆம் வட்டாரம்,*
*வேலணை மேற்கு,*
*வேலணை.* (75615)

தகவல்:
அப்பன்
(மகன்).

## கந்தையா சின்னப்பிள்ளை

(காளி ஆச்சி)



தனங்கிளப்பைப் பிறப்படமாகவும் நுணாவில் மத்தி, ஐயர் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னப்பிள்ளை (காளி ஆச்சி) நேற்று (20.06.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரம்பிள்ளை(முன்பு சாவகச்சேரி வைத்தியசாலை தற்போது கொழும்பு), கந்தசாமி(யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயலட்சுமி, இலட்சுமி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பேரன்மார்கள், பேர்த்திமார்கள் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2008) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொல்லங்கராய், காந்தாளம்பிட்டி இந்துமயானத்திற்கு பி.ப. 4மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மத்தி,*
*ஐயர் வீதி,*
*சாவகச்சேரி.* (75616)

தகவல்:
க.கந்தசாமி.

## மார்க்கு ஜேக்கப் (இளைப்பாறிய சாரதி C.T.B. )



கிளாலியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, சாவகச்சேரியை தற்காலிக வதிவிடமாகவும் தற்பொழுது 8A,சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான மார்க்கு ஜேக்கப் 19.06.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கு - றோசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - எலிசபேத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிசிலியம்மாவின் அன்புக் கணவரும் அருட்சகோதரி சிறியபுஸ்பம் AC (திருஇருதயக் கல்லூரி, கரவெட்டி), அன்ரன்(ஜேர்மனி), மேரிகலிஸ்ரா, அருட்சகோதரி டிலாந்தி AC(கார்மேல்மடம், அம்பிட்டிய), மரிஸ்ரெலா (ஆசிரியை, பாலையூற்று R.C.T.M.S., திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மேரி றோசா, அருட்தந்தை றெஜிஸ் ராசநாயகம்(புனித மாட்டீனார் குருமடம், யாழ்ப்பாணம்),செல்வராணி, பாக்கியநாதர்(ஆசிரியர், சென். ஜோசப் கல்லூரி, கொழும்பு), அருட்சகோதரி அன்ரனீற்றா H.F.(அதிபர், பற்றிமா றோ.க.பாடசாலை, உருத்திரபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜடா(ஜேர்மனி), உதயதாசன், யோஜல்(உத்தியோகத்தர், இலங்கைத் துறைமுகக் காரியாலயம், திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனும் ஜரோமி(மாணவி, தரம் 8, திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம்), ஜெனீஸ்ரோன்(ஜேர்மனி), றொபின்சோன் (ஜேர்மனி), சர்னிசா(மாணவி, தரம் 1, ஜோண்.பொஸ்கோ, யாழ்ப்பாணம்), டிலுக்சியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி வழிபாட்டு ஆராதனை நாளை (22.06.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*8A, சோமசுந்தரம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (75614)

தகவல்:
அருட்சகோதரி
சிறியபுஸ்பம் (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய, மாகாண விளையாட்டுப் போட்டிகளில் யாழ்ப்பாண மாணவர்களும் பங்குகோள்வதற்கு எதிர்காலத்தில் சரியான திட்டமிடல் அவசியம்

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஒரு வீரன் கலந்துகொள்ளாமல் விடுவது என்பது அவனது எதிர்காலத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் விடயமாகவே கருதப்படுகின்றது.

முன்னர் ஒரு காலத்தில் விளையாட்டு ஒரு பொழுதுபோக்காகக் காணப்பட்டதே அன்றி தொழில் ரீதியாக ஓர் எதிர்காலத்தைக் காட்டுவதாக அது அமையவில்லை. இன்று அத்தகைய நிலைமை இல்லை.

இன்று விளையாட்டென்பது தொழிலைப் பெறவழிகாட்டுவதாகவும் எதிர்காலத்திற்கு வித்திடுவதாகவும் பணம் ஈட்டும் ஒரு தொழிலாகவும் காணப்படுகின்றது.

இதனை ஏனோ பதவியில் இருக்கும் அதிகாரிகள் புரிந்துகொள்ளவதில்லை. முன்னேற்பாடான செயற்பாடுகள் எதனையும் மேற்கொள்ளாது இருந்துவிட்டு இறுதியில் கைவிரிக்கும் நிலைமையே இங்கு தொடர்கின்றது.

2006ஆம் ஆண்டு நாட்டுச் சூழ்நிலை

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

காரணமாக யாழ்ப்பாணம், வன்னி ஆகிய மாவட்டங்கள் மாகாண விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளமுடியவில்லை. இதனைக் கருத்தில்கொள்ளாது குறிப்பிட்ட ஒரு சில மாவட்டங்களுடன் போட்டிகளை மாகாண சபை அதிகாரிகள் நடத்தி முடித்து விட்டார்கள்.

இதேபோன்று 2007ஆம் ஆண்டு வட மாகாணம் தனி மாகாணமாகப் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து போட்டிகள் இடம்பெறவில்லை. பதிலாக வடமாகாணத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள் குறிப்பாக யாழ்.மாவட்ட மாணவர்கள் நேரடியாகத் தேசிய மட்டப் போட்டிகளுக்குச் சென்று தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

இந்தவேளையில் கிழக்கு மாகாண மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிகளில் கலந்துகொண்டு உரிய போட்டிகளுக்கான சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டார்கள். இதனுடைய தாக்கம் பல்கலைக்கழ

## உயர்கல்வி பெறும் வாய்ப்புகளுக்கு விளையாட்டுச் சாதனைகள் உதவுகின்றன

கம் முதல் கல்வியியற் கல்லூரிகள் வரை இருந்தமை பாதிக்கப்பட்ட மாணவர்களினால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாக யாழ்.குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை மக்களின் மனநிலையிலும் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும் குறிப்பாக கல்வி, விளையாட்டுச் செயற்பாடுகளில் அவர்களுடைய ஆர்வம் குறையவில்லை.

அதிகாரிகள் செய்ய வேண்டியதை உரிய நேரத்தில் செய்யாமல் விட்டுவிட்டு இறுதி நேரத்தில் மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் பல்வேறு கதைகளைக் கூறிச் சாட்டுப்போக்குச் சொல்வதும் அடிக்கடி இடம்பெறுகின்றன.

குறிப்பிட்ட சிலர் மட்டும் தமது செல்வாக்கைப் பயன்படுத்திப் போட்டிகளில் கலந்துகொள்வதும் ஏனையோர் போட்டிகளில் கலந்துகொள்ளமுடியாது தவித்து நிற்பதும் வழமையாகிவிட்டது. இதேபோன்று மாகாண மட்ட அதிகாரிகளின் திட்டமிடல்களும் சரியாக இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

யாழ்.மாவட்டம் அரசின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளபோதும் அரச நிர்வாகத்தில் இருக்கும் ஏனைய மாவட்டங்களுக்குக் கிடைக்கும் வசதிகள், வாய்ப்புகள் எவையும் இங்கு கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

கடந்த 14ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறவிருந்த மாகாண மட்டப் போட்டிகளில் யாழ்.மாவட்டம் புறக்கணிக்கப்பட்டமை பலரிடம் விசனத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ்.மாவட்ட மாணவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து கல்வியைத் தொடர்கின்றார்கள். ஒவ்வொரு மாணவனும் தமக்குக் கிடைக்கும் வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்தவே விரும்புகின்றான். இந்தவகையில் விளையாட்டில் ஈடுபட்டுள்ள மாணவன் தமக்குப் பல்கலைக்கழக அனுமதிதான் கிடைக்காவிட்டாலும் கல்வியியற் கல்லூரியிலாவது இடம் கிடைக்கவேண்டும் என்பதிலும் அக்கறையாக உள்ளான்.

இந்தவகையில் மாகாண மட்டத்தில் தான் பெறப்போகும் சான்றிதழ்கள் தமது எதிர்காலத்திற்கு வழிகாட்டும் என்ற நம்பிக்கையுடனேயே அவன் விளையாட்டில் ஈடுபட்டு வருகின்றான்.

வவுனியாவில் நடைபெற ஏற்பாடாகியிருந்த மாகாண மட்டப் போட்டிகள் தொடர்பாகச் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மாணவர்கள் முறைப்பாடு செய்தனர். இதனால் அமைச்சரின் நடவடிக்கையையடுத்து கடந்தவாரம் வவுனியாவில் இடம்பெற இருந்த விளையாட்டுப் போட்டி இறுதிநேரத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட மாணவர்கள் செல்ல அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இந்த மாத இறுதியில் போட்டிகள் அங்கு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு அரசியல் தலையீடு என்ற காரணம் கூறுவதை விடுத்து அதிகாரிகள் தமது திட்டமிடலைச் சரியாகச் செய்யவில்லை என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த விளையாட்டுப் போட்டி கூட அரசியல் வரை சென்று முடிவை எட்டும் நிலைமைக்குச் சென்றமை அதிகாரிகளின் அக்கறையற்ற தன்மையே. ஒவ்வோர் அதிகாரியும் எதிர்காலத்தைக் கருத்தில்கொள்ளாது எடுக்கும் முடிவுகளே, பின்னர் பிரச்சினைகள் ஏற்படக் காரணமாக அமைகின்றன.

அரச அதிகாரிகள் தமது கடமைகள், பொறுப்புகளை உணர்ந்து செயற்பட்டால் பிரச்சினைகள் சுமுகமாக முடிவடையும். அரசியல்வாதிகள் கூட சிறிய பிரச்சினைகளில் தலையிட்டு நேரத்தை செலவு செய்யாது தமது கடமைகளைச் செய்யக்கூடியதாக இருக்கும்.

ஒருவனுக்குக் கிடைக்கும் வாய்ப்பை இன்னொருவன் தட்டிப் பறிப்பவனாகவோ அல்லது தடை செய்பவனாகவோ இருக்

**விண்ணன்**

கக் கூடாது. தன்னால் செல்லமுடியாத ஓர் இடத்திற்கு அடுத்தவன் செல்லத் தயாராக இருந்தால் அவனை வாழ்த்தி அனுப்ப வேண்டும். பெறப்போகும் பெறுபேறுகள் எமது மாவட்டத்திற்கான புகழையும் மதிப்பையுமே அதிகரிக்கும்.

எதிர்காலத்திலேனும் இத்தகைய நெருக்கடிகள், பிரச்சினைகள் யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு ஏற்படாதவண்ணம் அதிகாரிகள் சரியான திட்டமிடல்களை மேற்கொள்ள வேண்டும். *

# வடமராட்சியில் இலக்கிய சங்க ஏற்பாட்டில் சிவத்தமிழ்செல்விக்கு அஞ்சலி

கரவெட்டி,ஜூன்21

வடமராட்சியில் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அன்னைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது.

கடந்த புதன்கிழமை துன்னாலை வடிவேலர் மண்டபத்தில் சங்கத் தலைவர் பொ.சுகந்தன் தலைமையில் இரங்கலுரையும் மலரஞ்சலியும் நடைபெற்றன.

கரவெட்டிப் பிரதேச செயலர், பருத்தித்துறைப் பிரதேச செயலர், அறிஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அன்னையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பங்குபற்றி அதன்பின் நினைவுரைகளையும் வழங்கினர்.

சங்கத்தலைவர் தனது இரங்கலுரையில் தெரிவிக்கையில் சைவத்திற்கும் தமிழுக்கும் மட்டுமன்றி சமூகத்திற்கும் வேண்டிய சேவையினை ஆற்றி வந்தவர் அன்னை. இவை தவிர கலை இலக்கியத்திற்கும் தனது பணிகளைப் பங்குற ஆற்றவேண்டும் என்பதற்காக இலங்கைக் கலை இலக்கிய சங்கத்தின் போஷகராக இருந்து நெறிப்படுத்தி வந்தவர். எனவே தான் அம்மா அவர்களின் இழப்பானது கலை இலக்கிய உலகிற்கோர் பேரிழப்பாக அமைகின்றது.

பல்துறை ஆற்றல்களினைக் கொண்ட இவரால் பலவகையான சேவைகள் மக்களுக்காக ஆற்றப்பட்டது. அதனால் ஒரு நடமாடும் தெய்வமாகப் பவனி வந்தார். இவ்வாறாக அறத்தினால் தனது வாழ்வினை இட்டுச் சென்ற அன்னையின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம் - என்றார். (202-70)

# சாவகச்சேரி நகர சபையினரின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்21

சாவகச்சேரி நகர சபையினர் உள்ளூராட்சி வார நிகழ்வுகளை எதிர்வரும் ஜூலை 9ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை அனுஷ்டிக்கவுள்ளனர்.

இவ்வாரத்தில் முன்பள்ளி சிறார்கள், ஆரம்பப் பிரிவு மாணவர்கள் ஆகியோருக்கான விளையாட்டுப் போட்டிகள், தரம் 5 மாணவர்களுக்கான சித்திரப்போட்டி, இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்கான பண்ணிசைப் போட்டி, உயர்பிரிவு மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி ஆகியவற்றையும்,

சனசமூக நிலையப் பிரதிநிதிகள், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கான பொது அறிவுப் போட்டிகளையும் நடத்தவுள்ளனர்.

அத்துடன் சந்தை, பொதுமயானங்கள் ஆகியவற்றில் சிரமதானங்களையும், சூழல் பாதுகாப்பு, டெங்கு, மலேரியா ஒழிப்பு கருத்தரங்குகளையும், புத்தகக் கண்காட்சியினையும் நடத்தவுள்ளனர்.

உள்ளூராட்சி வார நிகழ்வுகள் சபை எல்லைக்குட்பட்ட மக்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளவுள்ளதால் அனைத்து மக்களும் நிகழ்வுகளில் பங்குபற்றுமாறு நகர சபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் கோரியுள்ளார்.

உள்ளூராட்சி வார இறுதிநாள் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் ஆகியன வழங்கப்படுமெனவும் அரச சேவையில் 25 வருட சேவையைப் பூர்த்திசெய்த நகரசபை உத்தியோகத்தர்கள் கௌரவிப்பும் உள்ளூராட்சி வார நூல் வெளியீடும் இடம்பெறுமெனவும் அவர் தெரிவித்தார். (202-207)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன் 21

சாவகச்சேரி நகரசபையின் நகர அபிவிருத்தி ஆலோசனை சபை மற்றும் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கை ஆகியவற்றின் கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

காலை 9 மணிக்கு நகர அபிவிருத்தி ஆலோசனை சபைக் கூட்டமும் 10மணிக்கு உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கை கலந்துரையாடலும் இடம்பெறுமென நகர சபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்தார். (202-207)

# தீவகக் கல்வி வலய முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு வலுவூட்டல் பயிற்சிகள்

வேலணை,ஜூன்21

தீவக வலயத்திலுள்ள முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு வலுவூட்டல் பயிற்சிகளை நடத்துவதற்கு வலயக் கல்விப் பணிமனை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இதுவரை பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 23, 24, 25ஆம் திகதிகளிலும் பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 30, 01, 02ஆம் திகதிகளிலும் வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாலயத்தில் வலுவூட்டல் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

வேலணை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறைக் கோட்டங்களைச் சேர்ந்த அனைத்து முன்பள்ளிகளின் ஆசிரியர்களையும் பயிற்சியில் கலந்துகொள்ளுமாறு தீவக வலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (202-267)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்21

நீர்வேலி மேற்கு மாலை வைரவர் ஆலய பொங்கல் விழா நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகியது. இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நிறைவடையும். (202)

★ ★ ★

வலி.தென்மேற்கு,ஜூன்21

சித்தன்கேணி ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்த மாதம் 8ஆம் திகதியன்று பஞ்சரதப் பவனியும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. (202-135)

★ ★ ★

வலி.தென்மேற்கு,ஜூன் 21

பெரியவிளான் புனித யுவானியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த [illegible]ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு திருப்பலி பூசையும், அதனையடுத்து திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை பெரிய விளான் பங்குத்தந்தை அருட்திரு.என்.நேசநாயகம் அடிகளார் செய்துள்ளார். (202-135)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்21

சித்தன்கேணி பெரியதம்பிரான் ஆலய பொங்கல் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை 9 மணிக்கு சாடியில் நோன்புப் பூஜை ஆரம்பமாகும். நாளை காலை 6 மணிக்கு பெரிய கோயிலில் பொங்கல் விழா ஆரம்பமாகும். (202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்21

சாவகச்சேரி சங்கத்தானை வைரவ சுவாமி கந்தசாமி கோயில் பெருந்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் முதலாம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-207)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை காட்டுத்தறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா நாளை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202)

## தமிழ்மொழித் தின கலைத்திறன் போட்டிகள்

வேலணை,ஜூன் 21

தீவக வலயப் பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான தமிழ்மொழித் தின கலைத்திறன் போட்டிகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

கோட்ட மட்டப் போட்டிகளில் முதல் இரு இடங்களைப் பெற்றவர்கள் இப்போட்டியில் பங்குபற்றுமாறு தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (202-28 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

கடந்த மாதம் ஆரம்பமான புதிய வகுப்புக்களில் சனிக்கிழமை, செவ்வாய்க்கிழமை பிரிவுகளுக்கு பின்வரும் பயிற்சிகளுக்கு மேலும் மாணவிகள் உடன் அனுமதிக்கப்படவுள்ளனர்.

✲ கேக் ஐசிங் ✲ உணவு தயாரித்தல் ✲ கூந்தல் அலங்காரம்

(பயிற்சிக்காலம் 2 மாதங்கள்)

☞ மேலும் விபரங்களை வியாழன் வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப 1.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்:

**பதிவாளர்.**



# சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய இராஜகோபுர மஹாகும்பாபிஷேக பிரதிதின விழா

சர்வதாரி வருடம் ஆனி மாதம் 7ஆம் நாள் உத்தராட நட்சத்திரம் இன்று (21.06.2008) சனிக்கிழமை

அம்பிகை அடியார்களே!

மேற்படி எமது அம்பாள் ஆலயத்தில் இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டு ஐம்பது வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளதோடு வழமைபோல் இம்முறையும் எதிர்வரும் ஆனிமாதம் 7ஆம் நாள் உத்தராட நட்சத்திரதன்று 21.06.2008 சனிக்கிழமை இராஜகோபுர மஹாகும்பாபிஷேக பிரதிதின விழாச் சிறப்பாக நடைபெற அம்பிகையின் திருவருள் கூடியுள்ளது.

**விசேட அபிஷேகம் முற்பகல் 11 மணி**
**விசேட பூசை நண்பகல் 12 மணி**

தொடர்ந்து அம்பாள் வீதியுலா வரும் காட்சியும் மகேஸ்வர பூசையும் (அன்னதானமும்) நடைபெறவுள்ளன. அடியார்கள் யாவரும் இவ்விழாவிற்கு வருகை தந்து அம்பாளின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இத்தருணத்தில் தலைமுறை வழிவந்து ஆலயத்தின் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் அயராது பாடுபட்டு, இராஜகோபுரம், கதவு, மணிக்கூட்டுக் கோபுரம், கிணறு என அம்மன் திருப்பணி வேலைகளுக்கும் பராமரிப்புக்கும் அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த எம் சமூகத்திற்கும் புலம்பெயர் உறவுகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அம்பிகைக்கு மேலும் திருப்பணிகள் செய்வதற்கு அம்பிகையின் திருவருள் கூடியுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய். (75611)

தலைமுறை வழி வந்த 12ஆம் திருவிழா உபயகாரர்கள், ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்.

# CAD & BS

DIPLOMA IN COMPUTER AIDED DRAFTING AND BUILDING STUDIES



கட்டடத்தொழில் நுட்பவியலாளர்கள், கட்டடத்தொழில் நுட்ப மாணவர்கள்,. க.பொ.த (உ/த) கற்றோர் கவனத்திற்கு! உங்களுக்காகவே நவீன தொழில்நுட்ப யுக்திகளை உங்கள் துறையில் பிரயோகிக்கதக்க வகையில் வடிவமைக்கப்பட்ட விசேட கற்கைநெறி.

| | |
|---|---|
| Starts on | 21st June 2008 at 10.00 a.m. |
| Duration | 6 months (Part Time) |

Course Objective :

Sufficient background knowledge to those who seek employment as CAD Draftsman or Supervisor/ Technician, and/or want to proceed his/her studies in the field and, an in-depth knowledge to those who are already employed in the field in such categories.

Course Contents :

- Building Technology
- Construction Materials
- Building Services
- Building Drawings
- Quantity Surveying
- Basic Theory of Structures
- Computer Aided Drafting

JHS CITY CAMPUS
No. 200, Sivan Pannai Road, Jaffna.

## தென்மராட்சிப் பிரதேச குழுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புச் குழுக் கூட்டமும், பிரதேச விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

காலை 9.30 மணிக்கு பிரதேச விவசாயக் குழுக் கூட்டமும் முற்பகல் 11 மணிக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார். (202-207)

## சாவகச்சேரி ஹென்ஸ்மன் வீதி புனரமைக்கப்படுகிறது

சாவகச்சேரி ஹென்ஸ்மன் வீதியினை சீமெந்து கொங்கிறீற் வீதியாக மாற்றும்வேலைகள் நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது டச்சு வீதியிலிருந்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இவ் வீதியில் அமைந்துள்ள நீதிமன்றுக்கு செல்வோர் அஞ்சலக வீதியினைப் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதேச செயலகத்திற்கு அருகில் உள்ள இராமலிங்கம்வீதியினைகொங்கிறீற் வீதியாக மாற்றும்வேலைகள் முடிவடைந்துள்ளதால் விரைவில் பொதுமக்களின்பாவனைக்கு விடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## தென்மராட்சிப் பிரதேச முதியோருக்கு அடையாள அட்டை

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் முதியோர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதி முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதால் விண்ணப்பித்தவர்களை அன்றையதினம் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுக்கு வந்து பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (202-207)

## இதய அஞ்சலி



எமது ஆலயத்தில் பலமுறை சிறந்த சொற்பொழிவுகளை ஆற்றி யாவரையும் கவர்ந்திழுத்தவரும் சைவத்தமிழ்ப் பணி சமூகப்பணியே எனச் செயலாற்றிய பெருமாட்டியுமான

**சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி**

யின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது ஆத்மா தேவியுடன் இரண்டறக் கலக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலன சபை,** அருள்மிகு திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், திருநெல்வேலி. (75550)

## விழி நீர் சொரிகின்றோம்



சிவத்தமிழ்ச் செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்கள் வேலணை, வங்களாவடி முருகன் ஆலயத்தில் அன்று ஆற்றிய பிரசங்கம் இன்றும் எம் மக்களின் செவிகளில் ஒலித்து வண்ணமே உள்ளது. இத்தகைய பெருமைக்குரிய தெய்வத்தாயின் பிரிவுத்துயரில் நாமும் கலந்து அன்னையின் ஆத்மா சாந்தியடைய வேலணை வங்களாவடி முருகப் பெருமானை இறைஞ்சி வேண்டுகின்றோம்.

**பரிபாலன சபையினர்,**
வேலணை, வங்களாவடி முருகன் ஆலயம்.
**பரிபாலனசபை.** (75543)

## கண்ணீர் அஞ்சலி



கலாநிதி செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

சமூகத்தின் தேவையை உணர்ந்து அறப்பணி செய்த தங்களின் திருக்கரங்களை என்றும் நினைவு கொள்வோம்.

என் கடன் பணி செய்து கிடப்பதே.

அன்னதான சபையினர், வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்.
பன்னாலை, தெல்லிப்பழை. (75548)

## கண்ணீர் அஞ்சலி



எமது பேரன்பிற்குரிய நண்பரும் பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரியுமான **பா.இரகுநாதனின்** அன்புத் தந்தையும் ஓய்வுபெற்ற தபாலதிபருமான

**கே.பி.பாலகிருஷ்ணன்**

காலமானதையிட்டு எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நண்பர்கள், பருத்தித்துறை.** (ச/553433)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் கணபதிப்பிள்ளை பொன்னம்மா**

திங்களொன்று சென்றாலும் தேயாது உங்கள் நினைவு
திகட்டாத திருமுகமும் தித்திக்கும் இன் சொல்லும்
தினமும் கேட்கிறது எம் செவியில்- அருளிறையின்
திருவடியில் அமைந்து உங்கள் ஆத்மா சாந்தி பெறுக!

கடந்த 23.05.2008 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் அந்தியேட்டி நிகழ்வு நாளை (22.06.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் புற்றளைப் பிள்ளையார் கோயில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சபிண்டீகரணக் கிரியைகள் முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வுகளில் தவறாது கலந்து கொண்டு மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சாயி இல்லம்,
புற்றளை, புலோலி. (75549)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய்ப் பிரதேசத்தின் நிறுவனங்களின் சுகாதாரச் சீர்கேடுகளை முறையிடலாம்

## சுகாதார அதிகாரி பொதுமக்களைக் கோருகிறார்

யாழ்ப்பாணம்,ஜூன்21

மானிப்பாய் பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட நிறுவனங்கள், வர்த்தக நிலையங்களில் சுகாதாரக் குறைபாடுகள், சீர்கேடுகள் இருப்பின் தமக்கு முறைப்பாடு செய்யுமாறு பொதுச்சுகாதார அதிகாரி பொதுமக்களைக் கோரியுள்ளார்.

பிரதேச பொதுமக்கள் தங்கள் தங்கள் பகுதியிலுள்ள நிறுவனங்களில் சுகாதாரக் குறைபாடுகள் மற்றும் சுகாதார சீர்கேடுகள் இருப்பின் அதுபற்றிய தகவலை மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முறைப்பாடு செய்துகொள்வதன் மூலம் சுகாதார ரீதியாகச் சிறந்த சேவையைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை,

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் டினேஸ் ஜெயக்குமாரன் தலைமையிலான பரிசோதனைக் குழுவினர் கடந்த 12ஆம், 13ஆம் திகதிகளில் பண்டத்தரிப்பு மற்றும் சங்கானை பொதுசுகாதார பரிசோதகர் பிரிவுகளில் கடைகள், உணவகங்கள், தேனீர்க்கடைகள், பேக்கறிகள் ஆகியவற்றில் திடீர் பரிசோதனை மேற்கொண்டனர்.

இப்பரிசோனையின்போது பல நிறுவனங்களில் சுகாதார விதிகளுக்கு முரண்பட்ட விதத்தில் செயற்பாடுகள் நடைபெற்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

மோசமான சுகாதார நிலைமையிலுள்ள நிறுவனங்கள் மீது மல்லாகம் மாவட்ட நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (202-135)

# இசைத்துறைக்கும் தன்னாலான உதவிகளை செய்து வந்தவர் சிவத்தமிழ் அன்னை

## இசை வேளாளர் சங்கம் இரங்கல்

யாழ்ப்பாணம்,ஜூன்21

தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதில் முன்னின்று உழைத்த சிவத்தமிழ்ச் செல்வி, இசைத்துறைக்கும் தன்னாலான உதவிகளைத் தொடர்ந்து செய்துவந்துள்ளார்.

அன்னையின் மறைவு இசைக்கலைஞர்களுக்குப் பேரதிர்ச்சியைத் தந்துள்ளது. இசை வளர்ச்சியில் அக்கறை கொண்ட ஒரு பெருந்தகையை இன்று நாம் இழந்துவிட்டோம்.

மேற்கண்டவாறு இலங்கை இசை வேளாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.ஆர்.ஞானசுந்தரம் சிவத்தமிழ்ச்செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் மறைவையொட்டி சங்கத்தின் சார்பில் விடுத்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தமிழுக்கும் சைவத்திற்கும் அரும்பணியாற்றியதுடன் இசைக்கலைத்துறைக்கும் பெரும் பணியாற்றியுள்ளார். இளங்கலைஞர்களின் இசை வளர்ச்சிக்காக நாகசுர - தவில் பாடசாலையொன்றை அமைப்பதற்கு யாழ். மாவட்ட கலாசாரப் பேரவையுடன் இணைந்து முன்னின்று உழைத்த பெருந்தகை தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்கள். அன்னாரின் மறைவு நாகசுர - தவில் இசை உலகத்திற்கு பேரிழப்பாகும்.

முன்னாள் யாழ்.அரச அதிபரும் அப்போதைய யாழ்.மாவட்ட கலாசார பேரவைத் தலைவருமாகிய திரு.வை.மு.பஞ்சலிங்கத்துடனும் அப்போதைய யாழ்.மாவட்ட அரச அதிபர் பாலசிங்கத்துடனும் இணைந்து 12.10.1983 விஜயதசமியன்று நாகசுர - தவில் பாடசாலையை துர்க்காதேவி வளாகத்தில் ஆரம்பிப்பதற்கு ஆவன செய்தார்கள். அத்துடன் அங்கு பயின்ற 75 வரையிலான இசை மாணவர்களுக்கு வாத்தியக்கருவிகளையும் எழுதுபொருள்களையும் பெற்றுக் கொடுப்பதில் அனுசரணையாக இருந்ததுடன் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் போசன வசதியும் செய்து உதவினார்கள்.

பின்னாளில் போர்ச்சூழல் காரணமாகப் பாடசாலை தொடர்ந்து இயங்கமுடியாமல் போய்விட்டாலும் குறிப்பிட்ட சில ஆண்டுகள் பயிற்சி வகுப்புகளை நடத்த அவர் உதவி புரிந்தார். அந்தவகையில் இசைக் கலைஞர்களாகிய நாம் அவருக்குக் கடமைப்பட்டுள்ளோம். அம்மாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த் திப்பதுடன் நாகசுர - தவில் இசைத் துறையை மேலும் வளர்ச்சியடையச் செய்வதே அம்மாவிற்கு இசைக் கலைஞர்களாகிய நாம் செய்யக்கூடிய கைம்மாறாகும் - என்றார். (202)



யுனிசெவ்வின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப்பிரிவு பாடசாலை செல்லாத, பாடசாலை சென்று பல்வேறு காரணங்களால் இடைவிலகிய மாணவர்களுக்குக் கல்வி வழங்கும் செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

அண்மையில் சுன்னாகம் கண்ணகி குடியிருப்பு முகாமில் பெற்றோர்கள், பிள்ளைகளுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கை நடத்தியது. அக்கருத்தரங்கில் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாக உரையாற்றுவதையும் யுனிசெவ் நிறுவன நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் செல்வி வே.ராதிகா, வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விச் செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா, வலிகாமம் கல்வி வலய யுனிசெவ் செயற்றிட்ட இணைப்பாளர் சு.கணேசலிங்கம், எழுத்தறிவூட்டல் வகுப்பாசிரியர் த.மகாதேவன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

கருத்தரங்கில் கலந்துகொண்ட பெற்றோரையும் மாணவர்களையும் இரண்டாவது படத்தில் காணலாம்.

# சங்கரத்தை சின்னம்மா வித்தியாலய பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்21

சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசில் நாளும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அதிபர் வெ.இராஜகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவன திட்ட முகாமையாளர் கு. செங்குட்டுவன் கலந்துகொள்வார்.

நிறுவுநர் நினைவுரையைக் கவிஞர் சி. சிவசுப்பிரமணியம் நிகழ்த்துவார். (202)

# 'சமாதானத்தின் வாசல்' என்ற தொனிப்பொருளில் உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்21

உள்ளூராட்சி மன்றங்களால் அடுத்த மாதம் 09ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

'உள்ளூராட்சி சமாதானத்தின் வாசலாகும்' என்னும் தொனிப்பொருளுடனும் 'ஜனநாயக ஆட்சி முறையொன்றின் அத்தியாவசிய அம்சமொன்றான உள்ளூராட்சி துறையின் பொறுப்புகள், செயற்பணிகள் தொடர்பில் சிவில் சமூகத்தின் மத்தியில் சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்துவதும், உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளை நிறைவேற்றுவதற்காகப் பொதுமக்களின், பாடசாலை மாணவர்களின் மற்றும் அவ்வப் பிரதேசங்களில் செயற்படுகின்ற பல்வேறு அமைப்புகளினதும் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதை உறுதி செய்வதும்' என்ற குறிக்கோளுடனும் இவ்வருடம் உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

முதல்நாள் சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு செயற்றிட்டங்களும், இரண்டாம் நாள் கல்வி, நூல் நிலைய அபிவிருத்தி, முன்பள்ளிச்சிறார்கள் மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளையும், மாணவர்களுக்கான கல்விசார் செயற்பாடுகளாகக் கட்டுரை, சித்திரம் ஆகிய போட்டிகளையும் கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றையும் நடத்தும் செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்படும்.

மூன்றாம் நாள் சுற்றாடல் செயற்றிட்டத்தின்கீழ் கழிவுப்பொருள் முகாமைத்துவம், மரம் நடுகை, சிரமதானப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ளவும்,

நான்காம் நாள் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் தினமாக அனுஷ்டித்து சந்தைகள், வியாபார நிலையங்கள், நீர்த்திட்டங்கள், விளையாட்டு மைதானங்கள், மயானம், பிண எரிப்பகம் போன்ற 'அபிவிருத்திப் பணிகளை அறிமுகம் செய்யவும் -

ஐந்தாம் நாள் பிரதேசத்தில் உள்ள பல்வேறு சிவில் அமைப்புகள், ஏனைய அரச நிறுவனங்கள், சமூக அமைப்புகள், அரச சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து அனைவரின் ஒத்துழைப்புடன் மக்கள் பயன்பாட்டு செயற்றிட்டங்களை மேற்கொள்ளலும் ஆகிய செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

ஆறாம் நாள் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தும் தகவல் தொழில்நுட்பமும் தொடர்பாடலும் செயற்றிட்டங்களும்,

உள்ளூராட்சி வாரத்தின் இறுதிநாளான ஒவ்வோர் உள்ளூராட்சி மன்றமும் தத்தமது செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதும் உள்ளூராட்சி வாரத்தை வெற்றிகரமான தாக்கிக் கொள்வதற்காக விசேட ஊக்கத்துடன் செயற்பட்டு இவ்வாரத்தில் சிறந்த முறையில் பங்களித்த அனைவரையும் ஊக்குவிக்கும் வகையில் பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கும் செயற்றிட்டங்களையும் மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சும், மாகாண உள்ளூராட்சித் திணைக்களமும் சகல உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவித்துள்ளன. (202-207)

## வலி.தென்மேற்கு விவசாய நிலங்களில்

# கச்சான் விதைகளைப் பறவைகள் உண்பதாக விவசாயிகள் கவலை

வலி.தென்மேற்கு,ஜூன்21

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் விவசாயிகள் வயல் காணிகளில் விதைத்த கச்சான் விதைகளைப் புறாக்கள், காகங்கள் ஆகிய பறவைகள் கொத்தி உட்கொண்டு வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இம்முறை இப்பிரதேசத்தில் விவசாயிகளில் பலர் கச்சான் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அரச சார்பற்ற உதவி வழங்கும் நிறுவனங்கள் சிலவும் விவசாயிகள் சம்மேளனங்கள் ஊடாக விவசாயிகளுக்கு விதை கச்சான் வழங்கி வருகின்றன.

வயல் காணிகளில் நாட்டிய கச்சான் விதைகளை பறவைகள் இனம்கண்டு கொத்திச் சாப்பிட்டு வருவதாகவும் இதனால் தாங்கள் வயல் காணிகளில் பகல் நேரங்களில் காவல் இருந்து கண்காணித்து வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (202-135)




# சிறுவர்களை எதிர்காலத்திற்கு ஏற்ற முறையில் ஆரோக்கியமான சூழலில் வளர்ப்பது அவசியம்

## கோப்பாய்ப் பிரதேச செயலர் கருத்து



அச்சுவேலி,ஜூன்21

இன்றைய சிறுவர்களை எதிர்காலத்திற்கு ஏற்புடைய முறையில் ஆரோக்கியமான சூழ்நிலையில் வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பு சமூகத்தை சார்ந்தது. இந்த வகையில் சிறுவர்களுக்கான உரிமைகள், வசதிகள் வழங்கப்படவேண்டும். இதனைக் கருத்தில்கொண்டு பெற்றோரும் சிறுவர்களுக்கான அமைப்புக்களும் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும்.

இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் கோப்பாய் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ்.

வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள சிறுவர் கழகங்களுக்கான கல்வி - விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. விழாவிற்குத் தலைமை வகித்த வலி.கிழக்கு பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

இன்றைய சிறுவர்கள்தான் எதிர்காலத்தின் தலைவர்கள். இவர்கள் எதிர்காலச் சமூகத்திற்கு ஏற்புடைய முறையில் வாழ்வதற்கும், சமூகத்துக்கு விருப்புடன் சேவையாற்றுவதற்கும் ஏற்புடைய முறையில் வளர்த்தெடுக்கப்படவேண்டும்.

ஜப்பான் இன்று மிகவும் சிறந்த நிலையில் விளங்குவதற்கு காரணம் அங்கு சிறுவர்களுக்கு ஏற்புடைய வசதிகளை எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு வழங்கப்படுவதேயாகும். சிறுவர்கள் கல்வி, தொழில்நுட்பம், விளையாட்டு போன்ற சகல துறைகளிலும் ஊக்குவிக்கப்படுகின்றனர். வேலை செய்வதற்கான ஆர்வம் சிறுவயதிலிருந்து ஏற்பட்டு விடுவதால் பொறுப்புக்களை விருப்பத்துடன் ஏற்றுத் திட்டமிட்ட முறையில் நிறைவு செய்கின்றனர்.

எமது நாட்டில் இந்த வகையான செயற்பாடுகள் இல்லை. விருப்பத்துடன் பொறுப்புக்களை ஏற்றுச் செயற்படும் மனோபாவம் குறைந்து செல்கின்றது. இந்த நிலை அலுவலகங்களிலும் மேலோங்கிக் காணப்படுகின்றது.

சிறுவர்களுக்கான உரிமைகள், கடமைகள் உரியமுறையில் பேணப்படவேண்டும். சிறுவர் கழகங்களுக்கூடாக சகல வாய்ப்புக்கள், வசதிகளும் வழங்கப்படவேண்டும். சிறுவர்களை எதிர்கால வாழ்வுக்கு ஏற்புடையவர்களாக வளர்த்தெடுப்பதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார்.

சமூக அபிவிருத்தி ஊக்குவிப்பாளர் திருமதி நிர்மலா ரவிச்சந்திரன் உட்பட பலர் உரையாற்றினர். சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (202-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| 108 கலச சங்காபிஷேகம் உபயம்: திரு.த.புஸ்பராசா (இந்தியா) | 108 கலச சங்காபிஷேகம் உபயம்: திரு.K.தேவராஜா (ஜேர்மனி) | 1008 கலச சங்காபிஷேகம் உபயம்:திரு.இ.குகதாஸ் (லண்டன்) | 108 கலச சங்காபிஷேகம் உபயம்:வைத்திய கலாநிதி K.T.S.சபாநாதன் | 108 கலச சங்காபிஷேகம் உபயம்: திரு.குகதாசன் |
|---|---|---|---|---|

# அருள் ஞானமிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்

## ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம், கைதடி

## 1008 கலச சங்காபிஷேகமும் மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும்

## மகா கும்பாபிஷேக மலர் வெளியீடும்

பக்த அடியார்களே,
நிகழும் ஆனிமாதம் 8 ஆம் நாள் 22.06.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு விநாயக வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பித்து கலச சங்காபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

*கிரியைகள் நிகழ்த்தும் குருமார்கள்:* சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள், சிவஸ்ரீ யோ.குருசாமிக் குருக்கள், சிவஸ்ரீ தா.வாசுதேவக் குருக்கள், சிவஸ்ரீ கு.சரவணபவக்குருக்கள், சிவஸ்ரீ கா.கணேசக்குருக்கள், சிவஸ்ரீ க.சுதாகரக் குருக்கள், சிவஸ்ரீ ச.கேதீஸ்வரக் குருக்கள், பிரம்மஸ்ரீ சோ.சிவபாலசர்மா, பிரம்மஸ்ரீ சோ.வேணுகோபாலசர்மா, பிரம்மஸ்ரீ தா.விஷ்ணுவர்த்தன சர்மா, பிரம்மஸ்ரீ கு.கிருத்திக சர்மா, ஸ்தானிககுரு பிரம்மஸ்ரீ கு.சண்முகபவ சர்மா, ஆலயக் குரு பிரம்மஸ்ரீ கு.உமாசுத சர்மா.

## மகா கும்பாபிஷேக மலர் வெளியீடு

*இடம்: ஆலய மண்டபம்* — *காலம்: 22.06.2008 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணி* — *தலைவர்: வைத்திய கலாநிதி K.T.S.சபாநாதன் (ஆலய ஆலோசகர்)*

*பிரதம விருந்தினர்கள்:*
கௌரவ நீதிபதி **அ.பிறேம்சங்கா** *(மாவட்ட நீதிபதி, சாவகச்சேரி)*
கௌரவ நீதிபதி **கே.அரியநாயகம்** *(மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்)*

*சிறப்பு விருந்தினர்கள்:*
திரு.N.சீவரத்தினம் *(செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி)*
திரு.S.சந்திரகுமார் *(முகாமையாளர், இலங்கை வங்கி, சாவகச்சேரி)*

*கௌவர விருந்தினர்கள்:*
வைத்திய கலாநிதி வ.சின்னப்பு *(ஆனந்தஜோதி வைத்தியசாலை, சாவகச்சேரி)*
திரு.V.காசிநாதர் *(சங்கீதபூசணம், விடத்தற்பளை)*
திரு.K.சுந்தரம் *(உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, சாவகச்சேரி)*

### நிகழ்ச்சி நிரல்:

மலரின் பெறுமதி ரூ400

- மங்கள விளக்கேற்றல்
- திருமுறை ஓதல் சிவத்திரு த.ஆறுமுகம் (கைதடி)
- முன்னிலை: ஸ்ரீமத் வேதவித்தியாசகர் சுவாமிகள் (மகாதேவா ஆச்சிரமம், திருநெல்வேலி)
- ஆசியுரைகள்:சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் (காயத்திரி பீடம், இணுவில்)
  சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் (நயினை உற்சவ பிரதமகுரு)
  சிவஸ்ரீ யோ.குருசாமிக் குருக்கள் (பிரதமகுரு, இ.தோ.கந்தசாமி தேவஸ்தானம்)
  சிவஸ்ரீ தா.வாசுதேவக் குருக்கள் (பிரதம குரு, சட்டநாதர் சிவன்கோயில்)
- வரவேற்புரை: திரு.சு.செல்வராசா (ஆலய பொதுச் செயலாளர்)
- தலைவரின் சிறப்புரை: திரு.இ.குழந்தைவடிவேலு (சமாதான நீதிவான்)

பல ஆக்கங்களைத் தாங்கிவரும் இம்மலர் ஒவ்வொரு வீட்டிலும் நறுமணம் வீசட்டும். அடியார்கள் அனைவரும் மண்டாலாபிஷேகப் பூர்த்தி கலச சங்காபிஷேகத்திலும் கும்பாபிஷேக மலர் வெளியீட்டிலும் கலந்து சிறப்பித்து சிவபெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக. பகல் 1.00 மணிக்கு அன்னக்கொடை நிகழ்வு இடம்பெறும்.

திரு.இ.குழந்தைவடிவேலு (J.P தலைவர், அருள்ஞானமிகு மாதர்ஜி லிங்கேஸ்வரர் ஆலயம், கைதடி.
ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம் கைதடி.. தொ.பே: 0602213179

### சிறப்புச் சொற்பொழிவு:

- சமாதி ஆலயம்: கலாநிதி திரு.M.வேதநாதன் *(தலைவர், இந்துநாகரித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*
- நாடு போற்றும் தாய்: *கலாநிதி நா.வி.மு.நவரத்தினம் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*
- மாதாஜியின் அற்புதங்கள்: கலாநிதி அருள்மொழிச் செல்வர் திரு.கனகசபாபதி நாகேஸ்வரன் *(சிரேஷ்ட விரிவுரையாளர், சப்பிரகமுவா பல்கலைக்கழகம்)*
- மலர் வாழ்த்துரை: திரு.வீ.கணேசராசா (B.Com M.Edu *அதிபர், இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்)*
- மலர் வெளியீட்டுரை: பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் *(வாழ்நாள் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*
- முதற் பிரதி பெறுபவர்: திரு.ச.விசயகுமார் *(முகாமையாளர்,வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)*
- கௌரவப் பிரதி பெறுபவர்கள்
- சிறப்புப் பிரதி பெறுபவர்கள்
- கும்பாபிஷேக நிகழ்வு
- நன்றி நவிலல் : செல்வன் மு.பத்மரூபன் *(கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்கம்)*
- நன்றியுரை: திரு.நா.திருச்செந்தூர்நாதர் *(ஆலய நிர்வாக செயலாளர்).*

## ஓராண்டு நினைவுச்சுடர்



அன்னையின் அரவணைப்பில்: 10.10.1913

ஆண்டவன் அரவணைப்பில்: 03.07.2007

### அமரர் மாப்பாணர் கந்தசாமி

(துன்னாலை வடக்கு முன்னாள் கிராம அதிகாரியும் வல்லிபுர தேவஸ்தான மகாசபைத் தலைவரும்)

திதி: 21.06.2008

பண்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து சீரோடும்
சிறப்போடும் வாழவைத்து பேரோடும் புகழோடும் பூவுலகை நீத்து
ஆண்டொன்று ஓடிமறைந்தாலும் உங்கள் நினைவு
எம்மனதில் நீங்காமல் வாழ்ந்திடும் என்றென்றும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கௌரி அகம்,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.
தொ.பே: 2264134

தகவல்:
குடும்பத்தினர்.



ஓய்வுபெற்ற ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சுவாமிநாதனால் எழுதப்பட்டு சுவிஸில் உள்ள நீர்வேலி நற்பணிச் சங்கத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட "கற்றல் வழிகாட்டி - தரம் 5" நூல் வெளியீட்டு விழா நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உரையாற்றுவதையும், நூலாசிரியருக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் வே.ஞானகாந்த மாலை அணிவிப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர் மூன்றாவது படத்தில்.
*(படங்கள்: அச்சுவேலிச் செய்தியாளர்)*

# சுட்டுத்துண்டின்றி சோடா விற்றவருக்கு பருத்தித்துறை நீதிமன்று அபராதம்

மந்திகை,ஜூன்21

சுட்டுத்துண்டின்றி மக்களை ஏமாற்றக் கூடியவகையில் சோடா விற்பனை செய்தவருக்கு 2,500 ரூபா அபராதம் விதித்த பருத்தித்துறை நீதிமன்றம் அவரைக் கடுமையாக எச்சரித்துத் தீர்ப்பு வழங்கியது.

நெல்லியடியைச் சேர்ந்த ஒருவரே சுட்டுத்துண்டின்றி மக்களை ஏமாற்றக்கூடிய விதத்தில் சோடா விற்பனை செய்து யாழ். உணவு மருந்துப் பொருள்கள் பரிசோதனைக் குழுவிடம் அகப்பட்டுக் கொண்டவராவார்.

இவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி 2500 ரூபா அபராதம் விதித்து கடுமையாக எச்சரித்துத் தீர்ப்பு வழங்கினார். (202-218)

# சுழிபுரம் சாந்தைக் கிராமத்தில் பனம் கீரை நல்ல விளைச்சல்

சுழிபுரம்,ஜூன்21

சுழிபுரம், சாந்தைப் பகுதி வயல்களில் பனம் கீரை வகைகள் நல்ல விளைச்சலைத் தந்துள்ளன என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

வயல் காணிகளில் உள்ள நாற்றுமேடைகளில் விதைக்கப்பட்ட பனம் கீரை நல்ல விளைச்சலைத் தந்துள்ளதால்பிரதேச சந்தைகளிலும் இக்கீரை போதியளவு விற்பனைக்கு வந் துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (202-28)


COMPUTER EXPRESS
Institute of Information Technology
#15, Sirambiyadi Lane, Jaffna.021 222 8250
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

Diploma in Video Editing
முன்னணி Video Mixing Software களூடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

Diploma in Graphic Designing
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

Diploma in Quick Books
பிரபல கணனிக்கணக்கியல் மென்பொருள்
Course Fee : 2000/=

வகுப்புக்கள் ஆரம்பம் : 23/06/2008 09.00AM

விற்பனைக்கு
50 வகைகளுக்கு மேற்பட்ட வளர்ந்த செவ்வரத்தம் கன்றுகளும், 40 நாள்கள் நிரம்பிய (பூச்சி நீக்கிய) டையசோன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு.
Green Park
152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 6563

கடை விற்பனைக்கு
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி அழகொல்லைப் பிள்ளையார் ஆலயச் சந்திக்கு அண்மையில் 1 பரப்பில் அமைந்த சகல வசதிகளுடன் கூடிய 2 கடைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைக்குச் சிந்திய நெல்மணிகளில் இருந்து நெல் அறுவடை செய்த சாவகச்சேரி விவசாயி!

எமது நாட்டில் இன்று எக்காலத்திலும் கண்டிராத விலையேற்றத்தினை அரிசி கண்டுள்ளது. அரிசி விலை ஒரு கிலோ 100 ரூபாவினைத் தாண்டியுள்ளது. இவ் விலையேற்றத்திற்குக் காலம் தாழ்த்திப் பெய்த பெரு மழையும் அதிகரித்த வெள்ளப் பெருக்கும் காரணமாக இருந்தது. அரிசி விலை அதிகரிப்பு பல குடும்பங்களைப் பட்டினி விளிம்புக்குத் தள்ளியுள்ளது. 2006 ஒகஸ்ட் மாதம் ஏ-9 வீதி போக்குவரத்துக்கு மூடப்பட்டபோது அரிசிக்கு தட்டுப்பாடு இருந்த போதிலும் கப்பலில் கொண்டு வரப்பட்ட அரிசி கட்டுப்பாட்டு விலையில் கிலோ 30 ரூபாவாக மக்களுக்கு வழங்கப்பட்டது.




அவ் வேளையில் பொதுமக்களுக்குக் கிடைத்த வருமானத்தில் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்ட அரிசி உட்பட ஏனைய பொருள்களை வாங்க முடிந்தது. வருமானமில்லாத நிலையில் அரிசியின் விலை அதிகரிப்பு பல குடும்பங்களைப் பட்டினியின் விளிம்புக்குக் கொண்டு சென்றுள்ளது.

கப்பலில் கொண்டுவரப்பட்ட அரிசி யாழ். மாவட்ட மக்களின் உணவுத் தேவைக்கு நான்கு மாதங்களுக்குப் போதுமானதாக களஞ்சியங்களில் உள்ளதாக முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் சிறிது நாட்களில் 3 மாதங்களுக்கு போதுமான அரிசி கையிருப்பில் உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அண்மையில் கப்பலில் கொண்டுவரப்பட்ட அரிசி உடனடியாகப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டு பொதுமக்களுக்கு பங்கீட்டு அடிப் படையில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனை நோக்கும்போது களஞ்சியங்களில் உள்ள அரிசி மாவட்ட மக்களுக்கு இரண்டு மாதங்களுக்கோ அல்லது அதற்குக் குறைவான காலத்திற்கோ போதுமானதாக இருக்குமென்பதில் சந்தேகமே.

இவ் வேளையில் தென்மராட்சிப் பிரதேச நெற் செய்கையாளர் ஒருவர் அறுவடையின் போது சிதறிய நெல்மணிகள் முளைத்தபோது அதனை உரிய முறையில் பராமரித்து பயன் கண்டதாக பத்திரிகையில் வெளியான செய்தி மகிழ்ச்சியைத் தந்தது.

கடந்த வருடம் நெற்பயிர்களுக்கு



உரிய வேளையில் மழை பெய்யாததாலும், காலந்தாழ்த்தி பெருமழை பெய்ததாலும் நூற்றுக் கணக்கான ஏக்கர் காணிகளில் நெற்பயிர்கள் அழிந்தது அனைவரும் அறிந்ததே. இருப்பினும் கொடிய வெய்யிலிலும் அளவுக்கதிகமான மழை வெள்ளத்திலும் தப்பிப் பிழைத்த நெற்பயிர்கள் நெற்செய்கையாளர்களே எதிர்பார்க்காத அளவு

## யாழ்ப்பாணத்திலும் சிறுபோகம் செய்ய முடியும் என்பதற்கு இந்த முயற்சி ஓர் எடுத்துக்காட்டு

விளைச்சலைக் கொடுத்துள்ளன.

அறுவடை செய்யப்பட்டு வயல்களில் விடப்பட்ட நெற்கதிர்களும், அறுவடைக்குத் தயாரான நிலையில் வயல்களில் காய்ந்திருந்த நெற்பயிர்களும் பெருமழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கின. மழை விட்டதும் அவசரஅவசரமாக வெட்டப்பட்ட பயிர்களிலிருந்து சிதறிய நெல்மணிகள் அனைத்து நெல்வயல்களிலும் முளைத்துக் காணப்பட்டன. நெல் மணிகள் முளைத்து பயிராகும் வேளையில் மீண்டும் பெரு மழை பெய்து வயல்களில் வெள்ளம் தேங்கி நின்றதால் பயிர்கள் செழிப்பாக வளரத் தொடங்கின. இந்தப் பயிர்களிலிருந்து பயன்பெற எந்த வொரு நெற்செய்கையாளரும் முன்வரவில்லை. ஆனால் தென்மராட்சி பிரதேசத்தில் சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த பொன்னம்பலம் கனகரத்தினம் என்பவர் தனது 16 பரப்புக் காணியில் விளைந்த பயிர்களில் பயன்பெற விரும்பினார். வயல்களில் போதிய அளவு நீர் தேங்கியிருந்ததால் உரிய பசளையினையிட்டு பராமரித்து வந்தார். பயிர்கள் குடலைப் பருவமடையும் வரை வயல்களில் நீர் நின்றதால் பயிர்கள் செழிப்பாக வளர்ந்தன. குடலைப் பருவத்தில் பசளை யிடுவதற்கு வயல்களில் நீர் போதாமையால் சுமார் 100 மீற்றருக்கு அப்பால் உள்ள குளத்திலிருந்து நீரிறைக்கும் இயந்திரம் மூலம் தண்ணீரை வயல்களுக்குப் பாய்ச்சினார். அவரது முயற்சி வெற்றியளித்தது. இன்னும் இரு வாரங்களில் நெற்பயிர்கள் அறுவடைக்குத் தயாராக உள்ளன.

நெல்வயல்களில் பயிர்கள் முளைத்ததை கண்ட நான் பரீட்சார்த்தமாக மேற்கொண்ட முயற்சி காலபோகத்தின் போது கிடைத்த விளைச்சலைப் போன்று தற்போது பயிர்கள் விளைந்துள்ளன. எனது முயற்சிக்கு நல்ல பலன் கிடைத்துள்ளதால் இனி வரும் காலங்களில் இவ் வயல்களில் குளத்து நீரின் உதவியுடன் சிறு போக நெற்செய் கை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளேன் எனப் பெருமையுடன் தெரிவித்தார் அவர்.

மலைநாட்டு பயிர்களான கோவா, கரட், போஞ்சி, உருளைக்கிழங்கு, முள்ளங்கி, கறி மிளகாய் போன்ற பயிர்வகைகளை எமது மண்ணில் விளைவித்து சாதனை படைத்தவர்கள் யாழ்.மாவட்ட விவசாயிகள். நீர்ப்பாசன வசதிகள் குறைந்த எமது மண்ணில் உள்ள குளங்களைப் புனரமைத்தும், நன்னீர்த் தேக்கங்களை கடல்நீர் புகவிடாமல் தடுத்தும் நெற்பயிர்ச் செய்கைக்கு வழங்குவார்களாயின் நிச்சயம் யாழ். மாவட்டத்திலும் சிறுபோக நெற் செய்கையினை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியுமென பெருமையுடன் அவர் கூறினார்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களிலும் முளைத்த நெற்பயிர்களை நன்னீர் வசதியிருந்தவர்கள் முயற்சி செய்திருந்தால் அந்தக் குடும்பங்கள் காலபோக நெற்செய்கை அறுவடை வரை உணவுத் தேவைக்கு வெளியில் அரிசி வாங்கும் அவசியம் இருந்திருக்காது எனவும் அவர் கூறினார்.

ஒரு பயிர் அறுவடை செய்தால் குறைந்தது ஒரு மாதமாவது நிலத்தினையும் விதையின்னயும் காயவைத்து பயிர் செய்தால் ஆரோக்கியமான்விளைச்சலைப் பெறுவதுடன் நிலங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களையும் குறைக்க முடியுமென அனுபவம் வாய்ந்த நெற் செய்கையாளர்கள் தெரிவித்தனர். இதேவேளை மிருகங்களின் கழிவுக ளையும் இலை குழைகளையும் பசளையாகப் பாவித்த காலத்திலிருந்து கடந்த வருடம் வரை இந்த வருட கால போக நெற் செய்கையின் பின்னர் பெய்தது போன்ற மழை ஒரு காலமும் பெய்யவில்லையெனவும் அவ்வாறான மழை பெய்திருந்தால் பொன்னம்பலம் கனகரத்தினம்போல் எமது காலத்திலும் இந்த மண்ணில் இரு தடவைகள் நெல் உற்பத்தி செய்திருப் போமென வயோதிப நெற்செய்கையாளர்கள் சிலர் தெரிவித்தனர்.

பொன்னம்பலம் கனகரத்தினத்தின் முயற்சிகளையும் அவரது கருத்துக்களையும் கவனத்தில் எடுத்து எமது பிரதேசத்தில் சிறுபோக நெற்செய்கையை ஊக்குவிக்க அனைவரும் முன் வரவேண்டும்.

**தென்னவன்**

# வாசகர் திருமுகம்

## முதியோர் அடையாள அட்டைக்கு அளிக்கப்படும் மதிப்பு இதுதானா?

முதியவர்கள் தங்கள் தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக்கொள்ளும் முகமாக வழங்கப்பட்ட முதியோர் அடையாள அட்டைக்கு உரிய மதிப்பும், கௌரவமும் அளிக்கப்படாமல் உதாசீனம் செய்யப்படுவது குறித்து முதியோர்கள் ஆகிய நாம் பெரும் விசனம் அடைகின்றோம்.

சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட முதியோர் அடையாள அட்டையை எத்தனையோ கஷ்டங்களின் மத்தியில் பெற்றுக்கொண்டும், நோயுற்ற முதியவருக்கும் அது பயன்தரவில்லை. 85 வயது முதியவரான நான் நீரிழிவு, இரத்த அழுத்தம், இடுப்புவலி, கால்வீக்கம் என பலவித நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளேன். கடந்த 5 ஆம் திகதி (யூன்5) யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனை முடித்து மருந்து விநியோகப் பிரிவில் சென்று முதியோர் அடையாள அட்டையைக் காட்டி முன்னுரிமை பெற்று மருந்து வாங்க முயற்சித்தேன். ஆனால் வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவர் ''இந்த காட்டுக்கு மருந்து கொடுக்கிறதில்லை. கொப்பிக்குத்தான் மருந்து'' என்று கூறி என்னை வரிசையில் நிற்குமாறு கூறி தள்ளிவிட்டார். நீண்ட நேரம் நிற்க முடியாத நான் மருந்து எடுக்காமலேயே வீடு திரும்பி விட்டேன்.

முதியோர் அடையாள அட்டை முன்னுரிமை பெற உரித்தானது என்பது அந்த சிற்றூழியருக்குத் தெரியாதா? அல்லது தெரிந்தும் உதாசீனம் செய்தாரா?

எனவே யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் முதியோர்களை அலட்சியம் செய்யாது அவர்களை முன்னுரிமை அடிப்படையில் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள ஆவன செய்யவேண்டும் என பாதிக்கப்பட்ட முதியவர்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

**யாழ்ப்பாணம்.** **பாதிக்கப்பட்ட முதியவர்.**

## நியாய விலையில் சிமெந்து கிடைக்க வழிசெய்க

அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு அடுத்தடியாக சிமெந்தின் விலை எட்டிப் பிடிக்க முடியாத உயரத்தில் போகிறது. இன்று 2200/= க்கும் கூடவும் சிமெந்தைப் பெறமுடியாது உள்ளது. என்ன விலைக்கும் சிமெந்தை வேண்டக் கூடியவர்களும் உள்ளனர்.

ஆனால் வீட்டுத் திட்டத்தில் உள்ள ஏழைப் பயனாளிகள் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாவுக்கு மேல் மேலதிகமாக கொடுத்து ஒரு பைக்கெற்றைக் கொள்வனவு செய்யக் கூடிய நிலையில் உள்ளனரா? வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு முன்பு கொடுத்தது போல இனிமேல் சிமெந்து இல்லை. அவர்களையே வாங்கி வேலைகளைத் தொடருமாறு அதிகாரிகள் கூறிவிட்டார்கள்.

இன்றைய விலைவாசிகள் மிக உயர்ந்த நிலையில் உலக வங்கியின் வீட்டுத் திட்டப் பயனாளிகள் இந்த விலைக்கு (2200/= க்கு) சிமெந்தைக் கொள்வனவு செய்து வேலைகளைத் தொடர முடியாதுள்ளனர். தென்மராட்சிப் பிரதேச பயனாளிகளை சிமெந்தை வெளிச்சந்தை விலைக்கு வேண்டி வேலைகளைச் செய்யுமாறு அதிகாரிகள் கூறுகின்றனர். எனவே அரச அதிபர் இவ் விடயத்தில்கூடுதல் கவனமெடுத்து முன்பு போலவே நியாய விலையில் ஏழை மக்களுக்கு பெற்றுத்தர உரிய தரப்பினருடன் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கேட்கிறார்கள்.

இந்த வீட்டுத் திட்டத்தின் அனைத்து மக்களும் தமது நகைகளை அடைவு வைத்தும் விற்றும் முன்னைய வேலைகளை செய்த நிலையில் எல்லோரையும் கடன்காரன்ஆக்கி விட்டார்கள் என்று கண்ணீர் வடிக்கிறார்கள். ஏற்கனவே மிக மிக கஷ்டப்பட்டு நொந்து போன மக்களை மேலும் வருந்தாத வகையில் அரச அதிபர் உடனடி கவனம் எடுத்து முன்னர் போல நியாய விலையில் வழங்க வழி செய்வார்கள் என்று மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

**சங்கத்தானை.**

# மக்கள் முகம்



நவாலி தெற்கைச் சேர்ந்த யேக்கப் பெனடிற் அருமைநாயகம் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி.சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்ற இவர் பல சங்கங்களின் அங்கத்தவராக பணியாற்றி வருகின்றார்.

* * *



யாழ்.பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளர் சிவசுப்பிரமணியம் ஜெயசங்கர் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் இவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

* * *



வரணி, குருக்கள் குடியிருப்பைச் சேர்ந்த வீரகத்தி சிவசுப்பிரமணியம் அண்மையில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ. பிறேம்சங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் பெரியபுலம் மகாவித்தியாலய முத்தமிழ் விழாவில் யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) திருமதி மீரா அருள்நேசன் உரை யாற்றுவதை முதலாவது படத்திலும்-
போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு வித்தியாலய அதிபர் சி.இராமலிங்கம் சான்றிதழ் வழங்குவதை இரண்டாவது படத்திலும்-
நிகழ்வுக்குத் திரண்டிருந்த பாடசாலை மாணவர்களை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# தெல்லிப்பழைக் கோட்ட தமிழ்த் தின போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம்

வலி.வடக்கு, ஜூன்21

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற தமிழ் தினப் போட்டிகளின் முடிவுகளில் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது. ஏனைய விவரம் வருமாறு:

**கவிதை ஆக்கம்**

பிரிவு 4- தவம் பிரியதர்சினி (குட்டியபுலம் அ.த.க.பாடசாலை), சந்திரகுமார் சசிரா (மல்லாகம் மகாவித்தியாலயம்).

பிரிவு 5- லோகநாதன் அர்சிகா (யூனியன் கல்லூரி), பாலேந்திரன் கெஸ்ரன் (மல்லாகம் மகாவித்தியாலயம்).

**சிறுகதை ஆக்கம்**

பிரிவு 4- குகப்பிரியா இராமச்சந்திரன் (அளவெட்டி அருணாசலம் வித்.), கனகேஸ்வரன் கல்பனா (யூனியன் கல்லூரி), செல்வராசா பொபிதா (மல்லாகம் மகா வித்தி.).

பிரிவு 5- சௌந்தரராஜன் பிரியதர்சினி (யூனியன் கல்லூரி), தங்கவேல் கிசாந்தன் (வயாவிளான் மத்திய ம.வித்தி.), செல்வராசா பொபிதா (மல்லாகம் மகா வித்தி.).

**பாவோதல்**

பிரிவு 1- நித்தியானந்தன் சிவாஜன் (அருணோதயாக் கல்லூரி), சிவதுரை மதுஷனா (மல்லாகம் கனிஷ்ட வித்தி.), மகேஸ்வரன் மதனரூபி (தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம்).

பிரிவு 2- ஸ்ரீபாஸ்கரன் ஜனித்திரா (வயாவிளான் ம.ம.வித்தி.), சிவராசன் தனுராஜ் (யூனியன் கல்லூரி), சுதாகரன் சகானா (மகாஜனாக் கல்லூரி).

பிரிவு 3- செல்வம் தக்ஷானி (வயாவிளான் ம.ம.வித்தி.), சீவரத்தினம் துர்க்காஜினி (தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்.), கந்தசாமி பிரனீபா (மகாஜனாக் கல்லூரி).

பிரிவு 4- சுந்தரமூர்த்தி தஷாங்கன் (யூனியன் கல்லூரி), சுரேஷ்குமார் வத்சலா (தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தி.), செல்வராசா வாரணன் (அருணோதயாக் கல்லூரி), நடராசா நிவிதா (மகாஜனாக் கல்லூரி).

பிரிவு 5- பாலச்சந்திரன் தர்ஷா (மகாஜனாக் கல்லூரி), அன்க்கிளிஸ் குயின்ஸ்ரெலா (அருணோதயாக் கல்லூரி), கைலாயகிரிநாதன் சுகிந்தன் (வயாவிளான் ம.ம. வித்.).

**இசைவும் அசைவும்**

பிரிவு 1- மயூரகரன் கஜவரன் (அருணோதயக் கல்லூரி), உதயசீலன் கவியங்கா (அளவெட்டி வடக்கு அ.மி.த.க.), தவலிங்கம் பவதாரணி (தெல்லிப்பழை தந்தை செல்வா).

பிரிவு 2- நாகராசா கபிலன் (யூனியன் கல்லூரி), இரத்தினசிங்கம் நிக்ஷன் (மல்லாகம் மகா வித்தி.), தங்கராசா பமீனா (வயாவிளான் மத்தி. ம.வித்தி.).

பிரிவு 3- அருமைநாதன் சண்முகப்பிரியன் (யூனியன் கல்லூரி), மரியதாஸ் டொன்சிகா (வயாவிளான் ம.ம.வித்தி.), நித்தியானந்தன் சிந்தூரன் (அளவெட்டி அருணாசலம் வித்தி.).

பிரிவு 4- திருநாவுக்கரசு வதனா (வயாவிளான் ம.ம.வித்தி), சண்முகலிங்கம் யசோ (யூனியன் கல்லூரி), இராசகுமார் கல்பனா (அளவெட்டி அருணாசலம் வித்தி.),

பிரிவு 5- அருமைநாயகம் ஆகன்ஜா (யூனியன் கல்லூரி), பரராஜசிங்கம் ரெஜிதா (மல்லாகம் மகா வித்தி.), யசோதா (வயாவிளான் மத்.மகா.வித்தியாலயம்).

**இசை குழு**

பிரிவு 1- மல்லாகம் மகாவித்தியாலயம், இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம்.

பிரிவு 2- மல்லாகம் மகாவித்தியாலயம், வயாவிளான் மத்தி மகா வித்தியாலயம், யூனியன் கல்லூரி.

**குறுநடை ஆக்கம்**

பிரிவு 5- கருணேஸ்வரன் வினோபா (மல்லாகம் மகா வித்தி.).

பிரிவு 4- சண்முகலிங்கம் சபேசன் (அருணோதயாக் கல்லூரி), கதிரமலை. கௌசல்யன் (குட்டியபுலம் அ.த.க.பாடசாலை), அருணகிரிநாதன் ஜெஜீபா (இளவாலை மெய்கண்டான் வித்தி.).

**பேச்சு**

பிரிவு 1- எமிலியாம்பிள்ளை சாருஜன் (மல்லாகம் கனிஷ்ட வித்தி.), கிருபாகரன் வினோஜன் (அளவெட்டி வட.அ.மி.த.க.பா.), பத்மநாதன் ஜாம்சஜகா (மல்லாகம் விசாலாட்சி வித்தி.).

பிரிவு 2- மணிசேகரன் தரன்ஜா (மகஜானாக் கல்லூரி), நன்னித்தம்பி விதுஷாயினி (யூனியன் கல்லூரி), ராஜுசாந்தன் ஸ்ரீபிருந்தா (மல்லாகம் மகா வித்தி.).

பிரிவு 3- கேதீஸ்வரன் கௌசிகன் (மகாஜனாக்கல்லூரி), ராமதாஷ் ஜதிக்கா (யூனியன் கல்லூரி), உதயகுமார் உதயதர்சினி (அருணோதயாக் கல்லூரி).

பிரிவு 4- செல்வராசா கஜமுகன் (மல்லாகம் மகா வித்தியாலயம்), கனகசுந்தரம் நேமினா (அருணோதயாக் கல்லூரி), வெற்றிவேல் தர்ஷா( மகாஜனாக் கல்லூரி),

பிரிவு 5- கிருஷ்ணா கந்தசாமி (மகாஜனாக்கல்லூரி), கருணாகரன் கிருஷாந் (யூனியன் கல்லூரி), சிவராசா சுகன்ஜா (மல்லாகம் மகா வித்தி.).

**நடனம்**

பிரிவு 1- நடராஜன் ஜஸ்மியா (மகாஜனாக் கல்லூரி), செல்வராசா ஜெசிந்தா (வயாவிளான் ம.ம.வித்தி), வவானந்தன் சாத்விகா (அளவெட்டி அ.மி.த.பா.).

பிரிவு 2- செல்வநாதன் பானுஜா (யூனியன் கல்லூரி), மயில்வாகனம் சகானா (மகஜானாக் கல்லூரி), இரகுநாதன் நிரோஜா (வயாவிளான் மத்.ம.வித்தி.),

பிரிவு 3- அன்ரன் சர்மியா (வயாவிளான் ம.ம.வித்தி.), சிவசுப்பிரமணியம் ரூகல்யா (யூனியன் கல்லூரி), காந்தரூபன் சர்மியா (மல்லாகம் மகா வித்தி.).

பிரிவு 4- அகிலலோகநாதன் ரதிபனா (மகாஜனாக்கல்லூரி), இராசகுமார் மயூரி (வயாவிளான் ம.ம.வித்தி.), தர்மலிங்கம் தர்ஷனா (யூனியன் கல்லூரி).

பிரிவு 5- வரதராஜசர்மா பாரதி (யூனியன் கல்லூரி), தில்லைநாதன் சுமித்தா (மகாஜனாக் கல்லூரி), லோகேஸ்வரன் ஆஷா (வியாவிளான் ம.ம.வித்தி.). (202-86)


# மல்லாகம் கோட்டைக்காடு

அருள்மிகு சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானம்

தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்

காலம்: 21.06.2008 சனிக்கிழமை

நேரம்: காலை 10.30 மணி

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



சாளம்பை முருகனுடன்



ஆறுமுகம் இராசு



ஜெயக்கொடி ஜனார்த்தனன்



ஜெயக்கொடி சஞ்சீவன்

(75531)

கோட்டைக்காடு, மல்லாகம். தேர்த்திருவிழா உபயகாரர்கள்.


## சர்வதேச லயன்ஸ் கழக மாநாடு பாங்கொங்கில்

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் வருடாந்த மாநாடு நாளை மறுதினம் திங்கட்கிழமை பாங்கொங் நகரில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த மாநாட்டில் அனைத்து நாட்டு லயன்ஸ் கழகப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (202-207)


## நினைவில் மலரும் ஆண்டுகள் எட்டு

தாயக மண்ணில் நிஜமாய் 16 * 11 * 1936



தாயக மண்ணில் நிழலாய் 20 * 06 * 2000

### அமரர் கந்தையா சண்முகரட்ணம்

(ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர், யாழ்.தொழில் திணைக்களம்)

திதி: திருதியை (21.06.2008)

அப்பா, அன்பின் திருவுருவே அழியாத உங்கள் நினைவால்
ஆறாத துயர் சுமந்து இன்று ஆண்டுகள் எட்டு ஆனது
இதயத்தில் ஒளி விளக்காய் இனித்திடும் நினைவுகள்
வாழ்வுக்கு வளம் அமைத்த வழிகாட்டி நீங்கள்- அப்பா
பாசமுடன் பண்பினையும் பகிர்ந்தளித்த பெருந்தகையே!
ஈர் ஏழு ஜென்மம் எடுத்தாலும் ஈர நினைவோடு
உமை மறவாது நாமிருப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.29, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம். (75530)

என்றும் அழியாத உங்கள் நினைவுகளோடு:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# புதுடில்லி உயர்மட்டக் குழுவின் வருகையால் பயன் ஏதும் கிட்டுமா?

''தமிழர்களைக் கொன்று குவித்துவரும் இலங்கை இராணுவத்துக்கு இந்தியா இராணுவ உதவிகளைச் செய்வது தமிழினத்துக்குச் செய்யும் மன்னிக்க முடியாத துரோகமாகும்.''

- இப்படித் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று சென்னைத் தீவுத் திடலில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக்கழக மண்டல மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

''இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கண்மூடித்தனமாகச் சுட்டுக் கொல்லப்படுகின்றமை நீடிக்கின்றது.

*''தமிழக மீனவர்களையும் இலங்கைத் தமிழர்களையும் கொன்று குவிக்கும் இலங்கை அரசுக்கு இராணுவ உதவியும், ஆயுதத் தளபாடங்கள் வழங்க இரண்டு சதவீத வட்டியில் நானூறு கோடி ரூபா கடனும் வழங்கி இந்தியா ஒத்துழைக்கின்றது. ஆனால் இலங்கை அரசுக்கு இராணுவ உதவி ஏதும் செய்யவில்லை என இந்தியப் பிரதமர் இங்கு பொய் கூறுகின்றார்.*

*''மருந்து மற்றும் உணவின்றித் தவிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் மூலம் உணவு, மருந்து பேன்றவற்றைத் தமிழகச் சகோதரர்கள் வழங்குவதையும் இந்தியா தடைசெய்துள்ளது. இவற்றை எல்லாம் மக்கள் தாங்கிக் கொள்ளமாட்டார்கள்.''*

- இப்படி அந்த மாநாட்டில் காட்டமாக உரை நிகழ்த்தியிருக்கின்றார் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ.

ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினை விடயத்தில் புதுடில்லி நிர்வாகம் தமிழ் மக்களின் உள உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் அரசியல் நடத்துகின்றது என்ற ஆதங்கத்தை வைகோ மட்டுமல்ல தமிழகத்தில் பல தலைவர்களும் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றார்கள். ஜெயலலிதா, சுப்பிரமணிய சுவாமி போன்ற சில தலைவர்களைத் தவிர பெரும்பான்மையான தமிழகப் பிரமுகர்களினதும் மக்களினதும் விசனமாக இவ்விடயம் இருப்பது கவனிக்கத்தக்கது.

இலங்கை விடயத்தில் இங்கு தனது உண்மையான நண்பன் யார், தந்திரோபாயமாக நடக்கும் எதிரி யார் என்பதை அடையாளம் காண்பதில் தவறிழைத்து இந்த விவகாரத்தைப் புதுடில்லி குழப்பியடிக்கின்றது என்பதே தமிழர் தரப்பின் கவலையாகும்.

புதுடில்லியின் உயர்மட்டக் குழு ஒன்று சந்தடி, முன்னறிவிப்புகள், ஆரவாரங்களின்றி கொழும்பு வந்து சேர்ந்திருக்கின்றது. 'சார்க்' மாநாட்டு ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காகவே இக்குழு கொழும்பு வந்தது என்ற சாக்குப்போக்கு வெளிப்படையாகக் கூறப்படலாம்; அவ்வாறுதான் கூறப்படும்.

ஆனால் அக்குழுவின் விஜயத்தின் பின்னால் அர்த்தமுள்ள பல விடயங்கள் பொதிந்திருக்கின்றன என்பது உள்வீட்டுத் தகவலாகும்.

வடக்கில் - யாழ். குடாநாட்டில் - இராணுவத்தின் இருப்புக்கு நெருக்கடிகள், நெருக்குதல்கள் ஏற்படலாம் என்ற தகவல்கள் வெளியாகும் சமயங்களில் எல்லாம், இலங்கை விவகாரத்தில் புதுடில்லியின் கரிசனை அதிகரிக்கின்றது என்ற கோணத்தில் கூட இந்த உயர்மட்டக் குழுவின் சந்தடியற்ற திடீர் கொழும்பு வருகை அர்த்தப்படுத்தப்படலாம்.

அதேசமயம், இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான ஆள்கடத்தல்கள், காணாமற்போகச் செய்தல், சட்ட விரோதப் படுகொலைகள் மற்றும் மரணதண்டனைகள் போன்ற மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள் மோசமாக அதிகரித்துள்ளதன் பின்புலத்தில் அந்த விவகாரம் குறித்து இந்தியத் தரப்பின் ஆழ்ந்த சிரத்தையை இலங்கையின் ஆட்சிப் பீடத்துக்குத் தெளிவாகவும், திடமாகவும், உறுதியாகவும் தெரிவிப்பதும் இந்திய உயர்மட்டக் குழுவின் நோக்கமாக இருக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

இதேசமயம், இலங்கையில் கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்கு - ஊடக சுதந்திரத்துக்கு - எதிராகவும் ஆட்சிப் பீடத்தின் அரூபக் கரங்கள் சீறி எழுந்துள்ளமை சர்வதேசத்தில் பல தரப்புகளினதும் விசேட சிரத்தைக்கு உள்ளாகியிருக்கின்றது. அந்த விடயத்திலும் இந்தியாவும் அதிக கரிசனை காட்டுவதாகக் கூறப்படுகின்றது.

கொழும்பில் சில முக்கிய ஊடகவியலாளர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்ட போது அவர்களுக்குக் கவச மாகப் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துக் காபந்து பண்ணுவதில் இந்தியத் தரப்பு மிகுந்த ஈடுபாடு காட்டியமை - காட்டி வருகின்றமை - இங்கு கவனிக் கத்தக்கது. கொழும்பு வந்துள்ள உயர்மட்டக் குழு இந்த விடயங்கள் குறித்தும் அதிகம் கவனம் செலுத்தி, இலங்கை அரசுத் தலைமைக்கு கண்டிப்புடன் கூடிய சில ஆலோசனைகளை வழங்கக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் யதார்த்தப் புறநிலைமைகளை சரிவரப் புரிந்துகொண்டு, இவ்விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகளில் ஒன்றான தமிழர்களின் உள்ளக் கிடக்கையை, அவர்களின் எண்ண ஓட்டத்திலேயே உள்வாங்கி, அதன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்களுக்கு நியாயம் செய்யும் மனப்பக்குவத்துடன் இவ்விடயத்தை இந்திய உயர்மட்டம் கையாள முன்வரவேண்டும். அதை விடுத்து, ஏற்கனவேதான் அணிந்திருக்கும் - புலிகளைக் குறை கூறுகின்ற - கண்ணாடியை அணிந்தபடி, அதன் ஊடாகவே விடயங்களைக் கையாளத் தொடர்ந்தும் அது முயற்சிக்குமானால், இங்கு நிலைமை சீரடைவதற்கு ஆக்கபூர்வமான எதனையும் இந்தியாவால் செய்ய முடியாமல் போகும். இதனை அந்தப் பெரிய நாட்டினால் உணர்ந்துகொள்ள முடியாதிருப்பது ஏனோ...?

# படையினரின் ஆயுத விவரங்கள் ஊடகங்கள் ஊடாகப் புலிகளுக்கு!

## விசனிக்கிறார் ராஜித சேனாரத்ன

கொழும்பு, ஜூன் 21

இலங்கைப் படையினரிடம் உள்ள ஆயுதங்கள் மற்றும் விவரங்கள் ஊடகங்கள் ஊடாகப் புலிகக்கு இலகுவாகக் கிடைக்கின்றன என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியிருக்கின்றார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதத் தாக்குதல்களை முறியடிக்க படையினர் உயிரைக் கூடப் பொருட்படுத்தாமல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

படையினருக்குத் தேவையான ஆயுதங்களை முன்னர் தனியார்துறைத் தரகர்களே ஆயுத வியாபாரிகளிடம் கொள்வனவு செய்து வழங்கினர். ஆனால், இன்று அரசு ஆயுதங்களை நேரடியாக ஆயுத வியாபாரிகளிடம் கொள்வனவு செய்கின்றது.

இதனால், தனியார் துறை ஆயுதத் தரகர்கள் அரசின் மீது விசனமுற்றுள்ளனர். அத்துடன், படையினரிடமுள்ள ஆயுத விவரங்கள் குறித்த தகவல்களை இந்த ஆயுதத் தரகர் கள் ஊடகங்களுக்கு வழங்கு கின்றனர்.

ஊடகங்கள் இந்தத்தகவல்களை பத்திரிகைகளில் கட்டுரைகளாக வெளியிடும் போது படையினரிடம் உள்ள ஆயுதங்கள் குறித்த தகவல்கள் புலிகளுக்கு இலகுவாகச் சென்றுவிடும்.

இதனால் இதுகுறித்து ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப்பேச்சு நடத்தி வருகின்றோம்.

அடுத்த சில நாள்களில் ஊடகங்களின் இந்தப் பிரச்சினைக்குரிய செயற்பாடுகளுக்கு தீர்வு காணப்படும் என நம்புகிறோம் - என்றார்.

# யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூன்21

யாழ்ப்பாணம்பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகில் 2006/2007, 2007/2008 ஆம் கல்வியாண்டிற்கு முதலாம் வருடத்தில் நுண்கலை, இலங்கை பற்றிய படிப்புக்கள், தொடர்பாடற் கல்வி ஆகிய பாட அலகுகளிற்கு விண்ணப்பித்த மாணவர்கள் திசை முகப்படுத்தல் வகுப்புகளில் பங்குபற்ற விரும்பின் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகில் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு இணைப்பாளர் பேராசிரியர் கா.குகபாலன் கேட்டுள்ளார். (202)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன்21

சாவகச்சேரி பூவேந்தன் முன்பள்ளி யின் பெயரால் பூவேந்தனின் 15 ஆவது நினைவு நிகழ்வுகள் எதிர்வரும் 25 ஆம் திகதி முன்பள்ளியில் இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட பஜனை நடத்தப்படவுள்ளதுடன் மாணவர்களுக்கு சிற்றுண்டிகளும் வழங்கப் படவுள்ளன. நலன் விரும்பிகளைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்21

மாகியப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலய மோட்சாணந்தா மாதா மரியாயின் சேனையின் வெள்ளிவிழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அளவெட்டி தெற்கு றோ. க. த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மரியாயின் சேனைத் தலைவர் அ. அற்புதராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கொமிற்சிய ஆன்ம இயக்குநர் அருட்தந்தை றெஜி இராஜேஸ்வரன் கலந்து கொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்21

வெற்றிவேல் நிறுவன ஆதரவுடன் இணுவில் கலை ஒளி மன்றம் நடத்தும் ஓவியக் கண்காட்சியும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

மன்றத்தின் தலைவர் நா.கிருபா கரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தெற்கு உதவிப் பிரதேச செயலர் ஏ. சோதிநாதனும் சிறப்பு விருந்தினராக இணுவில் மேற்கு கிராம அலுவலர் க. இரவீந்திரனும் கலந்து கொள்வர். (202)

# 'ஓர் எழுதுவினைஞனின் டயறி' சிறுகதைத் தொகுதி நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 21

சமூகவியல் சமூகத்தின் ஏற்பாட்டில் த.ஆனந்த மயிலின் 'ஓர் எழுது வினைஞனின் டயறி' (சிறுகதைத் தொகுதி) நூலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அறிமுகவுரையை எழுத்தாளர் அ.யேசுராசாவும் மதிப்பீட்டுரைகளை நுண்கலைத்துறை விரிவுரையாளர் பா.அகிலன், எழுத்தாளர் மு.அநாதரட்சகன், தமிழ்த்துறை விரிவுரையாளர் க.அருந்தாகரன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (202)

# பழைய மாணவர் சங்க கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூன்21

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருமதி பா.இராசேந்திரசிங்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. பழையமாணவர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜூன்21

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் நடத்தப்பட்டுவரும் கல்வியாண்டு 2005/2007 க்குரிய பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுக்கான பரீட் சைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாபாரக் கற்கைகள் பீடம், வவுனியா வளாகத்தில் ஆரம் பமாகும்.

இதேவேளை முதலாம் வருட முதலாம் அரையாண்டுக்கான மீள் பரீட்சைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமையும் இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுக்கான மீள்பரீட்சைகள் எதிர்வரும் 27 ஆம் திகதியும் உயர் பட்டப்படிப்புகள் பீடத்திலும் வவுனியா வளாகத்திலும் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தமது அனுமதி அட்டையினை தாம் பரீட்சைக்கு விண்ணப்பித்த பீடத்தில் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (202)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 08 | 22.06.2008 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | சதுர்த்தி பி.இ 04.00 வரை |
| நட்சத்திரம் : | திருவோணம் மு.இ 11.29 வரை |
| சுபநேரம் : | 08.54 - 10.24 |
| ராகுகாலம் : | 04.24 - 05.54 |

# தவப்பேறாய் வந்துதித்த தங்கத் தமிழ்த் தலைவி



சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் நினைவஞ் சலிக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் சங்கத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராஜா தலைமையில் நடைபெறுவதை ஒட்டி இந்த இரங்கற் பா இங்கு பிரசுரமாகிறது.

*சிவத்தமிழின் செல்வியேயெம் தேசத்தின் ஒளிவிளக்கே*
*தவப்பேறாய் வந்துதித்த தங்கத் தமிழ்த் தலைவி!*
*உவமைசொல முடியாத உலகுபுகழ் பெருந்தாயே*
*சிவபெருமான் திருவடியில் சேவிக்கச் சென்றனையோ!*

*சைவநெறித் தத்துவத்தைத் தமிழமிழ்தில் குழைத்தேந்தி*
*தெய்வஅருட் திருமொழியில் தேனமுதாய்த் தந்தாயே*
*உய்யுநெறி காட்டுமுன்றன் உபதேசம் கேட்டிந்த*
*வையமெலாம் மகிழ்ந்ததுபோல் வான்மகிழச் சென்றனையோ!*

*செந்தமிழ்நின் திருவாயில் தெய்வமணம் வீசிவர*
*சிந்தையினைப் பறிகொடுத்துத் தித்திக்கக் கேட்டிருந்தோம்*
*அந்தமொழி தன்சபையில் நின்றொலிக்க வேண்டுமென்ற*
*எந்தைசிவன் அழைப்பேற்று எந்தாயே ஏகினையோ!*

*ஆலயங்கள் தர்மத்தின் அச்சாணி எனக்காட்டிச்*
*சீலம்மிக்க அறப்பணிகள் செய்வதுதான் ஆலயத்தின்*
*மேலான பணியென்று மெய்ப்பித்த அருட்தாயே*
*காலத்தை வென்றுசிவன் கழல்மணியாய்ச் சேர்ந்தனையோ!*

*பிறந்ததின அறக்கொடைகள் பேராறாய்ப் பெருகிவர*
*உறங்காவுன் கருணையுள்ளம் உரியஇடம் கண்டறிந்து*
*அறக்கொடைகள் அளவிலதாய் அள்ளியள்ளிச் சொரிந்தகையின்*
*திறங்காண வோசிவனார் சிவலோகம் அழைத்தாரோ!*

*அன்னையர்க்கும் ஆதுலர்க்கும் ஆதரவில் சிறுமியர்க்கும்*
*அன்னையென வீற்றிருந்து அறம்வளர்த்த மகளிரில்லம்*
*பொன்னான சைவத்தின் பண்பாட்டு விளைநிலமாய்*
*இந்நாட்டில் போலாக்க இறையுலகுக் கேகினையோ!*


*நடமாடும் நூலகமாய் நம்முன்னே வாழ்ந்தஅன்னை*
*திடமான சிவத்தமிழ்ச் செல்விஆய்வு நூலகந்தன்*
*இடமாக்கி எழில்ஞானச் சுரபியாய் இங்குவைத்து*
*நடமாடும் சிவனடிக்கே நன்னூலாய்ச் சென்றனையோ!*

*தேசமெலாம் சிவத்தமிழைச் செழிக்கவைத்த தெய்வமகள்*
*பாசமிலாப் பெருவாழ்வில் பணிசெய்து பணியென்ற*
*மாசில்லா மாணிக்க மணியேநீ சிவனடியில்*
*தேசுற்று நின்றொளிரச் சிவபுரமே சேர்ந்தனையோ!*

*சைவப் புலவர் சு.செல்லத்துரை*
*(அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்.....



கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த தேர்திருவிழாக் காட்சி.

(படம்: ரஞ்சன் சுஜந்தன்)




இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்தில் மின் அத்தியட்சகராக கடமையாற்றி இளைப்பாறிய வே.சடாச்சரமூர்த்திக்கு அண்மையில் பிரிவுபசார விழா அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது.

விழா நாயகனுக்கு பிரதேச மின் பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன் பொன்னாடை போர்த்துவதையும் அருகில் பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தன், சுன்னாகம் மத்திய மின் நிலைய பொறுப்பதிகாரி வீ.சண்முகநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.



யாழ்.மத்தியஸ்தர் சபையைச் சேர்ந்த பதினொரு உறுப்பினர்கள் அண்மையில் யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதவான்களாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பா.வின்சென்ற், யோ.வீ.ஜீவராஜா, ஞா.லூயிஸ் அன்ரனி, சின்னப்பு சிவசுப்பிரமணியம், திருமதி கௌரி முரளீதரன், செல்வி சசிகலா சரவணன், திருமதி ரகுநாதன் றாஜினிதேவி, பரராஜசிங்கம் பாலகிருஷ்ணன், ஆனந்தகுமார் யூலியன், நீக்கலஸ் பிரபாகரன், வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் ஆகியோர் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியுடன் எடுத்துக் கொண்ட படம்.




சாவகச்சேரி நகர்ப் பிரிவு கிராம அலுவலராக கடமையாற்றி இளைப்பாறிய வை.இராசரத்தினம் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வில் விழா நாயகனுக்கும் அவரது பாரியாருக்கும் மலர்மாலை மற்றும் பொன்னாடை போர்த்தப்படுவதையும் அருகில் மன்ற. தலைவர் செ.சண்முகநாதன், செயலாளர் வ.இரவிச்சந்திரன், பொருளாளர் ப.பாலேந்திரா ஆகியோர் நிற் பதையும் படத்தில் காணலாம். (படம்:தென்னவன்)



சிவலிங்க யோககேந்திரா நிலையத்தினால் திடம்புலம் நரசிம்ம வைரவ ஆலயப் பெருந்திருவிழாவின் இறுதி நாளன்று நடத்தப்பட்ட சைவ சமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள் சான்றிதழ்களுடன் காணப்படுகின்றனர். நிகழ்வின் விருந்தினர் க.நிஜலிங்கம், சொற்பொழிவாளர்களான சுந்த சத்தியதாசன், சசிதன் மற்றும் ஆலயப் பூசகர்களையும் படத்தில் காணலாம்.



தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழாவின்போது யாழ்.கல்வி வலய முன்னாள் சங்கீத உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.திலகநாயகம் போலின் சங்கீதக் கச்சேரி இடம்பெற்றது.

சங்கீதக் கச்சேரியில் அவர் பாடுவதையும், எஸ்.வரதராஜ சர்மா மிருதங்கம் வாசிப்பதையும், செல்வி வி.மதுரா வயலின் வாசிப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: 86)



உடுவில் பிரதேச செயலகத்திற்கு புதிய மாடிக்கட்டம் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழாவில் எடுக்கப்பட்ட படம்.



சிறுவர் உழைப்புக்கெதிரான பிரதேச மட்ட விழிப்புணர்வு நிகழ்வுகள் அண்மையில் சகல பிரதேசங்களிலும் நடைபெற்றன.

யாழ்.நகரில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.அகவொளி நிலைய இயக்குநர் அருட்தந்தை இராஜநாயகம் அடிகளார் மங்கள விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காலிறுதியில் சொதப்பியது போர்த்துக்கல்

# பட்டையைக் கிளப்பியது ஜேர்மன் அணி 12 ஆண்டுகளின் பின் அரையிறுதியில்!


பாஸ்ரின் சுவனெஸ்டிக்கர் மிரோஸ்லாவ் குளோஸ் மைக்கல் பல்லாக்

பாஸில், ஜூன் 21

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிக்கு முதல் அணியாக ஜேர்மனி தகுதிபெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் நடந்த காலிறுதியாட்டத்தில் பலமிக்க போர்த்துக்கல் அணியை 3-2 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி வெற்றிகொண்டு அரையிறுதிக்குள் நுழைந்து கொண்டது.

1996ஆம் ஆண்டு சம்பியன் பட்டம் வென்ற பின்னர், ஜேர்மனி அணி அரையிறுக்குள் நுழைவது இதுவே முதன் முறையாகும்.

'யூரோ கிண்ணம் - 2008' போட்டித் தொடர் சுவிற்ஸர்லாந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகளில் நடைபெற்றுவருகின்றது. தொடரின் காலிறுதிப் போட்டிகள் நேற்றுமுன்தினம் தொடங்கின. முதலாவது காலிறுதிப் போட்டியில் 'ஏ' பிரிவில் முதலிடம் பிடித்த போர்த்துக்கல் அணி, 'பி' பிரிவில் இரண்டாம் இடத்தைப் பிடித்துக் கொண்ட ஜேர்மனி அணியை எதிர்கொண்டது.

ஜேர்மனி வீரர்கள் தொடக்கத்திலிருந்தே தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர். போர்த்துக்கல் வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டம் ஆரம்பத்திலிருந்தே வெளிப்பட்டது. ஜேர்மனி வீரர்கள் பந்தைத் துரத்திச் செல்கையில் போர்த்துக்கல் வீரர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றமை ரசிகர்களை வெறுப்படையச் செய்தது.

ஆட்டத்தின் 22ஆவது நிமிடத்தில் ஜேர்மனி முதல் கோலைப் போட்டது. பொடொல்ஸ்கி பரிமாற்றம் செய்த பந்தை பாஸ்ரின் சுவனெஸ்டிக்கர் அருமையாகக் கோலாக்கினார்.

கோல் வாங்கிய அதிர்ச்சியில் இருந்த போர்த்துக்கல்லுக்கு, அடுத்த 4ஆவது நிமிடத்தில் ஜேர்மனி இரண்டாவது கோலை அடித்து மீண்டும் அதிர்ச்சி கொடுத்தது. 'பிறீகிக்' மூலம் அடிக்கப்பட்ட பந்தை மிரோஸ்லாவ் குளோஸ் தலையால் முட்டிக் கோலாக்கினார். இதனால் ஆரம்பத்திலேயே ஜேர்மனி 2-0 என்ற வலுவான முன்னிலையைப் பெற்றது.

பதில் கோல் அடிக்க போர்த்துக்கல் கடுமையாகப் போராடியது. 40ஆவது நிமிடத்தில் நுனோகோம்ஸ், போர்த்துக்கல் அணிக்கான முதலாவது கோலை அடித்தார். முதல் பாதியின் முடிவில் ஜேர்மனி 2-1 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் இரு அணி வீரர்களும் சளைக்காமல் போராடினர். ஜேர்மனி வீரர்களின் பக்கம் பந்து அதிகமாகவிருந்தது. ஆட்டத்தின் 61ஆவது நிமிடத்தில் ஜேர்மனி அணித்தலைவர் மைக்கல் பல்லாக் தலையால் முட்டி, அணிக்கான மூன்றாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார். இதன்மூலம் ஜேர்மனி 3-1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

போர்த்துக்கல் முன்கள வீரர்களான கிறிஸ்டியானா றொனால்டோ, டீகோ ஆகியோர் கோல் அடிக்கக் கடுமையாகப் போராடினார்கள். ஜேர்மனி பின்களம் வலுவாக இருந்தமையால் பல வாய்ப்புக்கள் தடுக்கப்பட்டன. ஆட்டம் முடிய மூன்று நிமிடங்கள் இருந்த நிலையில் - 87 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் 2ஆவது கோலைப் போட்டது. ஹெல்டர் போஸ்டிகா இந்தக் கோலை அடித்தார். அதன் பின்பு அந்த அணி கோல் போடுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

இறுதியில் ஜேர்மனி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றியைப் பதிவுசெய்து அரையிறுதிக்குத் தகுதிபெற்றது. 1996ஆம் ஆண்டு யூரோ கிண்ணத் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற பின்னர், அந்த அணி அரையிறுதிக்குள் நுழைவது இதுவே முதல் தடவையாகும்.

நேற்று நள்ளிரவு நடைபெறவிருந்த இரண்டாவது காலிறுதியாட்டத்தில் 'பி' பிரிவில் முதலிடம் பிடித்த குரோஷியா, 'ஏ' பிரிவில் 2ஆவது இடத்தைப் பிடித்த துருக்கி அணிகள் மோதவிருந்தன. இதில் வெற்றிபெறும் அணி அரையிறுதியில் ஜேர்மனியைச் சந்திக்கும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஜூன் 21

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகத்தினால் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்திவரும் லீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* உடுவில் டொன் பொஸ்கோ வி.க. எதிர் தாவடி காளியம்பாள் வி.க.
* சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் வி.க. எதிர் கொக்குவில் வராகி வி.க. (202-86)

* * *

அமரர் சந்திரகுமாரின் 12ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக அராலி திருமகள் விளையாட்டுக்கழகம் வலிகாமம் உதைப் பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்திவரும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பி.ப. 3.30மணிக்கு திருமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள்:-

* மூளாய் வளர்மதி வி.க. 'ஏ' அணி அராலி மாவத்தை வி.க. 'ஏ' அணி.
* அராலி சில்வெஸ்ரர் வி.க 'பி' அணி எதிர் மூளாய் வளர்மதி வி.க. 'பி' அணி. (202-86)

* * *

யாழ் மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையேயான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் இன்று காலை 8மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்த வரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி எதிர் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி.
* நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி எதிர் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி.
* உடுவில் பிரதேச செயலக அணி எதிர் வேலணைப் பிரதேச செயலக அணி.

கரவெட்டி பிரதேச செயலக அணியுடன் முதல்சுற்றில் வெற்றிபெறும் யாழ்ப்பாணம் அல்லது ஊர்காவற்துறை அணி மோதவுள்ளது.

* * *

உதைப்பந்தாட்ட சம்மேளனம் இ.ச.பேரம்பலம் சக நிறுவனங்களின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக் கிடையில் நடத்தும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்று இடம்பெறும் ஆட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு:-

* மு.ப 10மணி சென்.சாள்ஸ் ம.வி. எதிர் யூனியன் கல்லூரி.
* மு.ப 11மணி- ஸ்ரீமுருகன் வித்தியாலயம் எதிர் வேலணை மத்திய கல்லூரி. (01)

* * *

மந்திகை, ஜூன் 21

மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 15ஆவது ஆண்டு விழாவையொட்டி நடத்தப்பட்டு வரும் மென்பந்து துடுப்பாட்ட இரண்டாவது சுற்றுப் போட்டியில் இன்று பி.ப. 3மணிக்கு கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது. (1-218)

# கியூபா மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முடிவு

பிரசல்ஸ், ஜூன் 21

கியூபா மீதான பொருளாதாரத் தடைகளை நீக்கிக்கொள்ள, ஐரோப்பிய ஒன்றியம் முன்வந்துள்ளது.

2003ஆம் ஆண்டு, பிடல் கஸ்ட்ரோ அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி தலைதூக்கியது. இதையடுத்து எழுபதுக்கு மேற்பட்ட அதிருப்தியாளர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்கள். இச்செயலுக்கு ஐரோப்பிய ஒன்றியம் கடும் ஆட்சேபனை தெரிவித்தது. ஆட்சேபனையின் வெளிப்பாடக, அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளையும் விதித்தது. இப்போது அந்தத் தடைகளை நீக்கிக்கொள்ள ஒன்றியம் முன்வந்துள்ளது. எனினும் அதிருப்தியாளர்கள் இதனை வரவேற்கவில்லை.

ஒன்றியத்தின் உச்சி மாநாடு பிரசல்ஸில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. முதல்நாள் அமர்வின் முடிவில், ஒன்றிய வெளியுறவுகளுக்கான ஆணையாளர் பெனிட்டா பெரிரோ - வோர்டனர் கியூபா விவகாரம் குறித்துப் பேசினார். அப்போது அவர், ''கியூபா மீதான பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டு விடும்'' என்றார்.

நிச்சயமாக நீக்கப்படுமா? என்பதில் சந்தேகமே நீடிக்கின்றது. அது எப்படியிருப்பினும், ரவூல் கஸ்ட்ரோவின் புதிய அரசுக்கு ஒரு சாதகமான கருத்து என ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டார்கள். அதேவேளை, அநேக கியூபா அதிருப்தியாளர்கள், இம்முடிவை வரவேற்கவில்லை. மாறாக ஆட்சேபனை கிளப்பினார்கள்.

## பதவியிலிருந்து விலகமாட்டேன் முஷாரப் திட்டவட்ட அறிவிப்பு

இஸ்லாமாபாத், ஜூன் 21

ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகமாட்டார் என்று பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்

நேற்றுமுன்தினம் ராவல்பிண்டியில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் முஷாரப் கூறியவை வருமாறு:-

பாகிஸ்தானில் ஜனநாயகம் மலரக் காரணமாக இருந்தவனே நான்தான். தேர்தலில் வெற்றி பெற்ற கட்சிகள் கூட்டணி அமைத்து ஆட்சி நடத்தவும் அனுமதித்தேன். நான் பதவியில் இருந்த போது நாட்டுக்காக எவ்வளவோ பாடுபட்டேன். மக்கள் தீர்ப்பையும் மதித்தேன்.

நாட்டுமுன்னேற்றத்துக்குநான் சேவைசெய்ய விரும்புகிறேன். எனவே பதவி விலகமாட்டேன். ஜனாதிபதிப் பதவியில் நீடிப்பேன். என்னைப் பதவிநீக்கம் செய்ய முடியாது. - இவ்வாறு முஷாரப் கூறினார்.

## தற்கொலைத் தாக்குதலுக்கு ஆப்கானில் பன்னிருவர் பலி!

காபூல், ஜூன் 21

தென் ஆப்கானில் நேற்று வெள்ளிக்கிழமை, இராணுவ வாகன அணியொன்றின் மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 12 பேர் பலியாகினர். இவர்களில் அமெரிக்க வீரரொருவரும் 11 ஆப்கான் சிவிலியன்களும் அடங்குவர். இவர்களில் மூவர் சிறுவர்களாவர் என பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்தது.

கலவரங்கள் மிகுந்த ஹெல்மண்ட் மாகாணத்திலுள்ள மக்கள் நடமாட்ட மிகுந்த கடை வீதிக்கூடாக இவ்வாகன அணி சென்று கொண்டிருந்தது. அது முதலில் சிறிய ஆயுதங்களின் தாக்குதலுக்கு இலக்கானது. இதையடுத்து தற்கொலைக் குண்டுதாரி தன்னிடமிருந்த குண்டை வெடிக்க வைத்தார் என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.


**17 ஆம் ஆண்டு நினைவு கூருகின்றோம்**



மலர்வு:
25.02.1935

உதிர்வு:
30.06.1991

*அமரர் வேலாயுதபிள்ளை செல்வரத்தினம்*
*(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)*
திதி: 21.06.2008

அப்பா நீங்கள் எங்களை விட்டுச்சென்று
ஆண்டுகள் பதினேழு போனாலும்
இன்னும் நாங்கள் உங்கள்
இனிய நினைவுகளுடனே வாழ்கின்றோம்.

புகையிரத நிலையப் பக்கம்,
எழுதுமட்டுவாள்.
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(75612)


## தன்னைக் கடத்திக் கொலைசெய்ய அமெ. சதி என்கிறார் ஈரான் அதிபர்!

தெஹ்ரான், ஜூன் 21

''நான் ஈராக்கிற்குச் சென்றிருந்த சமயம் என்னைக் கடத்திச் சென்று கொலை புரிய அமெரிக்கா சதித் திட்டம் தீட்டியிருந்தது. எனினும் அது கைகூட வில்லை''

- இவ்வாறு ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதிநிஜாத், அமெரிக்கா மீது குற்றஞ் சுமத்தினார் என நேற்றுமுன்தினம் அரச தொலைக்காட்சிச் சேவை தெரிவித்தது.

ஜனாதிபதி அஹ்மதிநிஜாத் திடுக்கிடும் தகவலொன்றை வெளியிட்டார். ''நான் ஈராக்கிற்குச் சென்றிருந்த சமயம் அமெரிக்கா என்னைக் கடத்த வேண்டுமென்பதிலும், கொலை புரிய வேண்டுமென்பதிலுமே குறியாக இருந்தது'' - எனக் கூறியதாக தொலைக்காட்சி மேலும் தெரிவித்தது.

''நான் மார்ச்சில் ஈராக்கியத் தலைநகரான பக்தாத்துக்குச் சென்றிருந்தேன். அச்சமயம் என்னைக் கொலை செய்ய 'விரோதிகள்' சதித் திட்டம் தீட்டியிருந்தார்கள்'' - என ஜனாதிபதி, மத்திய நகரான கைம்மில் நடைபெற்ற மார்க்கப் பெரியார்களின் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டதாக என, ஜனாதிபதியின் இணையமும் தெரிவித்தது.



அஹ்மதிநிஜாத் தொடர்ந்து பேசுகையில், எனது விஜயத்தின் போது, இந்தச் சதித் திட்டம் ஈடேறவில்லை. இறுதி நிமிடத்தில் நான் மேற்கொண்ட எதிர்பாராத மாற்றங்களே இதற்குக் காரணம். நான் ஈராக்கை விட்டுக் கிளம்பிய பின்னர்தான் சதிகாரர்களுக்கு இந்த மாற்றங்கள் தெரிய வந்தன.'' - என்றும் அவர் கூறினார் என்று இணையம் அதன் செய்தியில் மேலும் குறிப்பிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர ... யாழ்ப்பாணம்

## உயர்மட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பாதுகாப்புத் துறையுடனும், வெளிவிவகாரத் துறையுடனும் சம்பந்தப்பட்ட மூத்த அதிகாரிகள் ஒன்றாகக் கொழும்புக்கு வருவதற்கான நோக்கம் குறித்துப் பகிரங்கப்படுத்தப்படாவிட்டாலும் -

ஓகஸ்ட முதலாம் திகதி கொழும்பில் ஆரம்பமாகும் சார்க் உச்சிமாநாட்டை ஒட்டிய இந்தியத் தரப்பின் ஏற்பாடுகளை இங்கு மேற்பார்வை செய்யவே அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று இலங்கைத் தரப்பில் கூறப்பட்டது.

ஆனால் சார்க் மாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் உட்பட்ட தலைவர்கள் கொழும்பு வருவது மற்றும் அதையொட்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆராய்ந்து, பரிசீலித்துத் தீர்மானங்களை எடுக்கும் நோக்கோடு 'விடயங்களை முற்கூட்டியே கண்காணிக்கும் அதிகாரிகள் குழு' ஒன்று ஜூலை மாதம் 2ஆம், 3ஆம் வாரங்களில் இலங்கைக்கு வந்து தங்கிநின்று பணியாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கின்றது என்றும் -

அதற்கு முன்னர் இத்தகைய ஓர் உயர் மட்டக் குழு ஒன்று அந்தப் பணியைச் செய்வதற்காக நேரத்துடன் இங்கு வரவேண்டிய தேவையும் அவசியமும் இல்லை என்றும்-

இந்திய இராஜந்திர வட்டாரங்கள் 'உதயனு'க்குக் கோடி காட்டின.

வடக்கு - கிழக்கு யுத்தக்கள நிலைமை, இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முன்முயற்சிகள், தமிழர் தரப்பின் ஆதங்கங்களை, கவனத்திற் கொள்ளாத கொழும்பின் போக்கு, அதிகரித்து வரும் மோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகங்கள் போன்றவை உட்பட புதுடில்லியின் கரிசனைக்குரிய முக்கிய விடயங்கள் தொடர்பாக இந்தியாவின் ஆழமான கருத்து நிலைப்பாட்டை தெளிவாகவும், திடமாகவும் கொழும்புக்கு எடுத்துரைத்து உணர்த்தும் இலக்கிலேயே இத்தகைய உயர்குழு ஒன்றைப் புதுடில்லித் தலைமை கொழும்புக்கு அனுப்பியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மனோகணேசன் எம்.பி. போன்ற - மக்களின் தற்போதைய அவல நிலைமையை அம்பலப்படுத்தி வருகின்ற - அரசியல் பிரமுகர்கள் மற்றும் தொண்டரமைப்புப் பிரதிநிதிகளையும் இம்மூவரணி சந்தித்துக் கலந்துரையாடும் என்றும் தெரியவருகின்றது.(சி)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 10 பேர் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்றும் ஏனைய மூவரும் பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## மன்னார் பெரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுடன் இராணுவத்தினர் முன்னேற முயன்றனர் என்றும், அதைத் தடுத்துத் தாங்கள் மேற்கொண்ட முறியடிப்புத் தாக்குதலில் இராணுவத்தினர் பலத்த உயிரிழப்புளுடன் தமது ஆயுதங்களையும் கைவிட்டுத் தமது நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்றனர் என்றும் புலிகள் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

இதேவேளை, மன்னார், வவுனியா முன்னரங்க நிலைகளான பெரியமடு, காயாமோட்டை, நெடுங்கண்டல், ஆண்டான்குளம் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகளில் 17 பேர் உயிரிழந்தனர் என்றும் 14 பேர் காயமடைந்தனர் என்றும் தமது தரப்பில் மூவர் உயிரிழந்தனர் என்றும் மேலும் ஒன்பதுபேர் படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அன்றையதினம் மணலாறு, கிரிபென்வெவ, ஜானகபுர பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகளில் ஆறுபேர் உயிரிழந்தனர் என்றும் மேலும் 20 பேர் வரை படுகாயமடைந்தனர் என்றும் தமது தரப்பில் ஏழுபேர் படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் முகமாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகளில் இருவர் உயிரிழந்தனர் என்றும் தமது தரப்பில் மூவர் படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது. (அ-உ)

## பிரபாகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக அரசாங்கத் தரப்பு உறுப்பினர் கோஷமெழுப்பினர்.

அதற்குப் பதிலளித்து உரையாற்றிய ரணில்-

2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போதே டிரான் அலஸ் தலைமையிலான குழுவினரை கிளிநொச்சிக்கு அனுப்பி, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக் கள் வாக்களிப்பதை தடுப்பதற்கு பேரம் பேசப்பட்டது.

அந்தப் பேரத்தின் போது கொழும்பிலிருந்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அரசாங்கமே பிள்ளையானுடன் ஒப்பந்தம் செய்து உறவு கொண்டாடி வருகின்றது. பிரபாகரன், பிள்ளையான், தமிழ்ச்செல்வனை நான் சந்தித்தது கிடையாது. அவர்களுடன் எனக்கு எந்த உறவும் இல்லை. 1991ஆம் ஆண்டு, லண்டனில் காலஞ்சென்ற அன்ரன் பாலசிங்கத்தை நான் சந்தித்து பேசியுள்ளேன்.

### புலிகளுக்கு அரசு பணம்கொடுத்த விடயத்தை உரிய நேரத்தில் நிரூபிப்பேன்

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார். இதன் காரணமாக 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களை வாக்களிக்கவிடாமல் தடுப்பதற்காக அவர் புலிகளுக்குப் பணம் கொடுத்தார்.

இந்த உண்மையை வெளியுலகத்திற்குக் கொண்டு வந்த ஸ்ரீபதியும் இபபோது உயிருடன் இல்லை. இருப்பினும் புலிகளுக்கு அரசு பணம் கொடுத்த விடயத்தை நான் உரிய நேரத்தில் நிரூபிப்பேன் -என்றார். (அ)

## இரு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களையும் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவங்தனா, கே.ஸ்ரீபவன் ஆகியோரைக் கொண்ட ஆயம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.

கலைக்கப்பட்ட மேற்படி இரு மாகாண சபைகளினதும் எதிர்க் கட்சித் தலைவர்களான ஐக்கிய தேசியக் கட்சியின் இரு பிரமுகர்கள், மேற்படி சபைகள் இரண்டிலும் அங்கம் வகித்த ஜே.வி.பி. உறுப்பினர்களான இருவர் மற்றும் இரு பொது மக்கள் சார்பில் இந்த ஆறு மனுக் களும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்கள் நேற்று முதல் தடவையாகப் பரிசீலனைக்கு எடுக்கப் பட்ட அன்றே தள்ளுபடி செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-உ)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான முறையில் காணி அதிகாரம் வழங்கப்படமாட்டது. 13ஆவது திருத்தச் சட்டத்தில் இந்த விடயம் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதோ அவ்வாறேதான் அது நடைமுறைப்படுத்தப்படும்.

நாட்டின் ஏழு மாகாணங்களில் காணி அதிகாரம் ஒரேவிதமாகவே நடைமுறையில் உள்ளது. அதே நடைமுறைதான் கிழக்கிலும் இருக்கும்.

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று எந்த விடயமும் கிழக்கில் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது - என்றார். (சி)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என்றும் மன்னார் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சடலங்கள் மன்னார் வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தன.

இப்பகுதியில் இருந்து இம்மாதத்தில் மட்டும் நான்கு சடலங்கள் மீட்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## ஐ.தே.க.அதிருப்தி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றத்தில் நீதிபதி சிசிர ரத்னாயக்கா முன்னிலையில் இந்த மனுக்கள் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவற்றை விலக்கிக் கொள்ளும் விண்ணப்பங்கள் மனுதாரர்கள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டன.

மனுக்களை விலக்கிக் கொள்வதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது.

முன்னர் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டமையை அடுத்து அவற்றைப் பரிசீலித்த மாவட்ட நீதிமன்றம், மனுதாரர்களை கட்சியின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்து விலக்குவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு விதித்திருந்தது என்பது தெரிந்ததே.

இந்நிலையில், இந்த மனுக்கள் திடுதிப்பென - சத்தம் சந்தடியின்றி - நேற்று விலக்கிக் கொள்ளப்பட்டமையின் பின்னால் அரசியல் மர்மம் இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

இன்று
சர்வமத
பி.ப.2.30
இன்னிசை
நிகழ்வு
இடம்:-இளங்கலைஞர் மண்டபம்
சட்டநாதர் கோவில் வீதி,
நல்லூர்.

இதோ உங்களுக்காக...!
MP4 PLAYERS
Orange 11,500/-
• 2 GB (Expand 2 GB)
• Camera • FM Radio • MP3
• Games • Voice Recording
• USB Cable • Power Charger
• Head Phone • Driver CD
MP3 PEN DRIVE Orange 6,250/-
• 1 GB (Data) • FM Radio • MP3
• USB Cable • Voice Recording • Head Phone
• 1 GB • FM Radio • MP3
• USB Cable • Head Phone 4,750/-
MP3 / FM Radio Player for Vehicles 3,800/-
HP Note Book (Laptop) 89,000/-
Processor : Intel Core 2 Duo 2.16 GHz RAM : 1GB DDR2
HDD : 120GB Screen : 15" 4' WXGA TFT VGA : 224MB
DVD/RW Double Layer / WiFi / Bluetooth / Card Reader / Bag
LASER PRINTER (Toner) 13,750/-
LASER PRINTER SCANNER COPIER (Toner) (3 IN 1) 32,000/-
LASER COLOUR PRINTER (4 Toners) 41,000/-
ACCESSORIES
LQ 300 + II Epson Printer - 21,000/-
Internal TV Card - 3,400/-
LCD TV Card - 4,900/-
56 K Modem - 950/-
Woofer 2.1 - 2,500/-
Woofer 2.1 Logitec - 3,500/-
Micro Lab 5.1 - 7,250/-
Creative 5.1 - 8,400/-
128 SD RAM - 1,300/-
256 SD RAM - 2,400/-
Scanner - 6,100/-
Negative Scanner - 12,000/-
MONITORS (1 - 3 Years Warrenty)
View Sonic / Samsung 15" Black CRT - 11,750/-
View Sonic 17" Silver Black CRT - 16,400/-
View Sonic / Daewoo / Samsung 15" LCD - 19,500/-
View Sonic 17" Wide Screen LCD - 23,000/-
View Sonic / Samsung 19" LCD - 26,000/-
PROCESSOR (All Processors 5 Years Warrenty)
Intel Pentium 3.0 Ghz - 8,200/-
Intel Pentium 1.8 Duo Core - 8,200/-
Intel Pentium 2.0 Ghz - 8,700/-
Intel Pentium 2.2 Duo Core - 9,900/-
Intel Pentium 2.4 Core 2 Duo - 14,500/-
Intel Pentium 2.4 Core 2 Quad 8M - 29,250/-
DVD WRITER (1 Year Warrenty)
Samsung SATA - 3,900/-
Sony / HP - 4,300/-
Combo - 3,200/-
CDRW BenQ - 3,100/-
PENDRIVE
Kingston 1 GB - 950/-
Kingston 2 GB - 1,400/-
Kingston 4 GB - 2,400/-
Kingston 8 GB - 4,800/-
MOTHER BOARD (1 - 3 Years Warrenty)
MSI DDR II Intel - 5,400/-
ECS Intel 945 - 5,400/-
Asrock DDR II - 5,700/-
Foxconn DDR II Intel - 6,100/-
Gigabyte Intel 945 - 6,200/-
Energy 478 - 6,400/-
Asus - P5GC-Max 1333 - 7,300/-
Intel Original 945 GCNL - 8,500/-
HARD DISK (1 - 3 Years Warrenty)
80 GB SATA - 4,900/-
160 GB SATA - 5,600/-
250GB SATA - 7,500/-
TONER (Original)
HP Toner 15 A - 5,400/-
HP Toner 13 A - 5,400/-
HP Toner 49 A - 5,400/-
Samsung ML 2010 - 7,900/-
DIGITAL CAMERA
Canon 8.1 Mega Pixels
Nikon 10.1 Mega Pixels
UPS (1 Year Warrenty)
Mercury 650 W - 5,800/-
Powertree 650 W - 6,000/-
Powertree (1.2 KV) - 12,500/-
* Warranty valid for 1 - 3 years
MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)

Microsoft Certified
Systems Engineer / Administrator
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
★ Banking துறையினருக்கு அவசியமானது.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 22.06.2008 12.30PM
இன்றும் நாளையும் 50% கற்கைநெறிக் கட்டண சலுகை
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

LAPTOPs
மலிவு விலையில்
HP COMPAQ
IBM LENOVA கணனிகள்
INTEL, CELERON, DUAL CORE, CORE 2 DUO, 512MB RAM, 80GB HARD DISK, WEBCAM, WIRELESS,
ரு 75,000லிருந்து, 3 வருட உத்தரவாதத்துடன்
STP Your Partner in IT Solution
149, KASTHURIAR ROAD, JAFFNA. T.P: 2226147

பணிநிலை வெற்றிடம்
* இயந்திர இயக்குனர் (முன் அனுபவம் உள்ள ஆண்கள்)
(Offset Machine Minder)
* புத்தகம் கட்டுனர் (முன் அனுபவம் உள்ள ஆண்கள், பெண்கள்)
(Book Binder)
* கணனி தட்டெழுத்தாளர், பக்க வடிவமைப்பாளர் (முன் அனுபவம் உள்ள ஆண்கள், பெண்கள்)
(Computer Typesetter & Designer)
18 வயதிற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்
விண்ணப்புதாரிகள் 25.06.2008 ஆம் திகதிக்கு முன் காலை 11.00 மணி—மாலை 4.00 மணி வரை நேரில் சமூகம் தரவும்
கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல:424, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்[illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org